விலை சதம் 5

முதற் பதிப்பு

பக்கங்கள் 4

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு, கொழும்பு.

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE.)
REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.
இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்

தனிப் பிரதி	சதம்	5
3 மாதச் சந்தா	ரூ.	6-00
6 மாதச் சந்தா	,,	12-00
1 வருடச் சந்தா	,,	24-00

மானேஜர்,
"சுதந்திரன்"
194 A, தட்டாரத் தெரு, கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO
Phone: 3411
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
நாமார்க்கும் குடியல்லேம்

புத்தகம் 1 | கொழும்பு, சர்வஜித்து ஸு ஐப்பசி மீ 1உ சனிக்கிழமை | Colombo, October, 18. 1947 | ஹிஜிரி 1366 துல்ஹஜ் பிறை 3 | இதழ் 137

டில்லியில் ஷேக் அப்துல்லா

அகில இந்திய சமஸ்தான பிரஜைகள் கமிட்டி கூடுகிறது

கத்தியவாருக்கு இந்திய துருப்புகள்

பிரிட்டிஷ் பத்திரிகைகளுக்கு லார்டு இஸ்மே புத்திமதி

புதுடில்லி, அக். 17

பாக்கிஸதானிலிருந்து ஆயிரக் கணக்கான ஜனங்கள் நவீன ஆயுதங்களுடன் காஷ்மீர் எல்லையிலுள்ள பூஞ்ச் பிரதேசத்திற்குள் படையெடுத்து வந்து தாக்குவதாக காஷ்மீர் சமஸ்தான சர்க்கார் அறிக்கை தெரிவிக்கிறது. வடமேற்கு பஞ்சாப்பிலுள்ள சியால்கோட் ஜில்லாவைத் தாக்குவதற்கு காஷ்மீர் சர்க்கார் ஏற்பாடு செய்வதாக பாக்கிஸதான் பத்திரிகைகளும் பாக்கிஸதான் ரேடியோவும் வெளியிட்ட செய்தி உண்மையல்லவென்று காஷ்மீர் சர்க்கார் அறிவிக்கிறார்கள். பூஞ்சிலுள்ள முஸ்லிம் கிராமங்களை ஆயுதம் தாங்கிய கூட்டத்தார் தாக்குவதாக இவ்வார ஆரம்பத்தில் பாக்கிஸதான் அந்நியநாட்டு மந்திரி காரியாலயத்தில் அறிவித்தனர். பாக்கிஸதான் ராணுவம் ரஜாஎடுத்துக்கொண்டு பூஞ்சிலுள்ள தத்தம் வீடுகளுக்குச் சென்றபோது அவர்கள் இத்தகவலைத் தெரிவித்தார்களாம்.

காஷ்மீர் சமஸ்தானம் 84,471 சதுரமைல்விஸ்தீரணமுள்ளது அது இன்னும் இந்திய யூனியனிலோ அல்லது பாக்கிஸ்தானிலோ சேரவில்லை; இந்த சமஸ்தான மன்னர் 52 வயதுள்ள ஹிந்து மகாராஜாவான லெப்டினன்ட் ஜெனரல் ஸர் ஹரிசிங். இந்த சமஸ்தானத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக இருக்கிறார்கள்.

ஷேக் அப்துல்லா

காஷ்மீரத்தின் தேசிய மகாநாட்டின் தலைவரும் அகில இந்திய சமஸ்தான பிரஜைகள் மகாநாட்டின் தலைவருமான ஷேக் முஹம்மது அப்துல்லா இன்று விமான மார்க்கமாக இங்கு வந்தார். அவர் இந்தியா பிரதம மந்திரி பண்டித நேருவின் விருந்தினராகத் தங்கியிருக்கிறார். ஞாயிற்றுக்கிழமை இங்கு நடைபெறும் மகாநாட்டுக் காரியக் கமிட்டியின் அவசரக் கூட்டத்திற்குத் தலைமை வகிக்க அவர் இங்கு வந்திருக்கிறார். இவர் இந்திய சமஸ்தான இலாகா மந்திரி சர்தார் படேலையும் சந்தித்துப் பேசுவார்.

கிழக்கு பஞ்சாப் ஹைக்கோர்ட் நீதிபதியும் எல்லை நிர்ணயக் கமிஷனில் அங்கத்தவராக இருந்தவருமான திரு. மேஹர்சந்த் காஷ்மீர் சமஸ்தான பிரதம மந்திரி பதவியை ஏற்றுக் கொண்டார்.

கத்தியவாருக்கு இந்திய துருப்புகள்

புதுடில்லி, அக். 16

ஜூனாகத் ஒரு மாதத்துக்கு முன் பாக்கிஸதானில் சேர்ந்த போது பக்கத்திலுள்ள சமஸ்தானங்களின் பாதுகாப்புக்கு அபாயமிருப்பதை உணர்ந்து இந்திய சர்க்கார் கத்தியவாரில் போதிய துருப்புகளை நிறுவத் தீர்மானித்தார்கள். அதன்படி நாளை கத்தியவார் தீபகற்பத்தின் தென்கரையிலுள்ள ஜாபராபாத்தில் இந்தியப் படையொன்று இறங்கும்.

ஹைதராபாத்

ஹைதராபாத், அக். 15

ஹைதராபாத் சமஸ்தானம் இந்திய யூனியன் சர்க்காருடன் நடத்திவரும் சமரசப் பேச்சுவார்த்தைகளைப்பற்றி தற்சமயம் எதுவும் தெரிவிக்க முடியாதென்றும், ஹைதராபாத் எதிலும் சேராதென்றும் தற்காலிக ஒப்பந்தம்செய்வதுபற்றி பேச்சு நடைபெறுகிறதென்று நாளை தூதுக்கோஷ்டி டில்லிக்குப் போவதாகவும் சர்க்கார் அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.

வாக்கெடுப்பு

லண்டன், அக். 16

'ஸ்டேட்ஸ்மன் அன்ட் நேஷன்' என்ற பத்திரிகை பின்வருமாறு எழுதுகிறது:-

சமஸ்தான மக்களின் வாக்கெடுப்பு மூலம் சமஸ்தானங்கள் பாக்கிஸதானிலோ அல்லது இந்தியாவிலோ சேர அனுமதிக்கவேண்டும். ஜூனாகத்திலும் காஷ்மீரிலும் இம்முறையை அனுஷ்டித்ததால் ஜூனாகத் இந்தியாவுடனும் காஷ்மீர் பாக்கிஸதானிலும சேரும். ஜூனாகத்தில் ஹிந்துக்களும், காஷ்மீரத்தில் முஸ்லிம்களும் பெரும்பான்மையாக இருக்கிறார்கள்.

இந்தியாவும் பிரிட்டிஷ் பத்திரிகைகளும்

லண்டன், அக். 15

இந்தியாவிலுள்ள உண்மையான நிலைமையைத் தெளிவுபடுத்த இங்கு வந்திருக்கும் லார்டு இஸ்மேயும் திரு. காப்பெல் ஜான்ஸனும் இங்குள்ள பத்திரிகாசிரியர்களைத் தனித்தனி சந்திக்கிறார்கள்.

பிரிட்டிஷ் பத்திரிகைகள் பாக்கிஸதானுக்கு சாதகமாகவும் இந்தியாவுக்குப் பாதகமாகவும் செய்திகள் பிரசுரித்து வருவது கண்டு இந்தியா கவர்னர் ஜெனரலும் பிரிட்டிஷ் சர்க்காரும் கவலை கொள்ளுகிறார்கள். ஆதலால் பிரிட்டிஷ் பத்திரிகைகளின் இந்தப் போக்கிரிததனமான பிரசாரத்தை நிறுத்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இங்கு கருதப்படுகிறது.

லார்டு இஸ்மேயும் ஜான்ஷனும் 20-ம் தேதி இந்தியா திரும்புகிறார்கள்.

லண்டன் பத்திரிகையில் கவர்னர் கடிதம்

லண்டன், அக். 17

கிழக்குப் பஞ்சாப்பிலிருந்து பாக்கிஸதான் வரும் முஸ்லிம் அகதிகளுக்கு உதவி செய்யும்படி மேற்குப் பஞ்சாப் கவர்னர் ஸர். மூடி லண்டன் டைம்ஸ் பத்திரிகையில கடிதம் எழுதியிருக்கிறார். (ராய்ட்டர்)

15 சென்ட்டர்கள் தெரிவு

பிரதிநிதிகள்சபை தேர்தல் முடிவு

பொதுத்தேர்தலில் கட்டுப்பணமிழந்த யூ. என். பி. அபேட்சகருக்கு முதல்வெற்றி

தோல்வியுற்றபோது வகுப்புத் துவேஷத்தைக் கக்கியவருக்கு யூ. என். பியின் பரிசு

கொழும்பு, அக். 17

நேற்று குறிப்பிட்ட நேரத்திற்கு அரைமணிநேரம் தாமதித்து பிரதிநிதிகள் சபை கூடியது. நேற்றைக்கு முன்தினம் 30 அபேட்சகர்களின் நியமனச் சீட்டு தாக்கல் செய்யப்பட்டிருந்தபடியால் அவர்களில் 15 பேர்களை சென்ட் சபைக்கு அங்கத்தினர்களாகத் தெரிந்தெடுக்க நேற்று பிரதிநிதிகள் சபையின் அங்கத்தினர்கள் ரகசிய வோட்டளித்தபின் சபை நாலரை மணி நேரம் ஒத்திவைக்கப்பட்டது. வோட்டுகள் எண்ணப்பட்டு முடிந்ததும் சபை மீண்டும் கூடியபோது 'ஸ்பீக்கர்' திரு. ஏ. எப் மொலமுரே பகல் 2-30 மணிக்கு தெரிந்தெடுக்கப்பட்ட 15 சென்ட்டர்கள் பெயர்களையும் சபையில் வாசித்தார்.

தெரிந்தெடுக்கப்பட்ட 15 சென்ட்டர்கள் பின்வருமாறு:-

யூ. என். பி.

திரு. டபிள்யூ. ஏ. பி. சொய்சா
ஸ்ரீமதி. ஏ. எப் மொலமுரே
திரு. சிரில் டி சொய்சா
,, ஜஸ்டின் கொத்தலாவல
,, பர்னஸ ரத்வத்த
,, சி. சரத் வஜபசிங்க
,, ஆர். எப். எஸ். டி மெல்
,, ஏ. ஆர். ஏ. ராஸிக்
டாக்டர். எம். ஜி. பெரைரா

சமசமாஜக்கட்சி

திரு. டபிள்யூ. கே. ஜினதாச

தமிழ்காங்கிரஸ

டாக்டர், இ. எம். வி. நாகநாதன்

இந்தியன் காங்கிரஸ

திரு. பெரி சுந்தரம்

போல்ஷிவிக் லெனினிஸட்கட்சி

திரு. டி. டபிள்யூ. கே. பெரைரா

சுயேச்சை

திரு. எஸ. நடேசன்

கமியூனிஸட்

திரு. எல், பி, ஜயசேனா

யூ. என். பி. விசித்திரப் போக்கு

பிரதிநிதிகள் சபைக்கு நடைபெற்ற பொதுதேர்தலில் தோல்வியுற்றவர்கள் பொதுஜன அபிமானததை இழந்தவர்களாதலால் அவர்களை சென்ட சபைக்குத் தெரிந்தெடுப்பதோ நியமனம் செய்வதோ முறையற்ற செயலாகும் என்பது பொதுஜன வாக்காக இருந்து வருகிறது. அப்படியிருந்தும் நேற்று நடைபெற்ற சென்ட சபையில் யூ. என். பி. கட்சியார் நடத்துகொண்ட மாதிரி விசித்திரமாகவும் விபரீதமாகவுமிருக்கிறது. தெரிந்தெடுக்கப்பட்ட சென்ட்டர்களில் ஒருவரான திரு டபிள்யூ. ஏ. பி. சொய்சா பொதுதேர்தலில் கட்டுப்பணத்தை இழந்தவர், தோல்வியுற்றபோது வகுப்புத்துவேஷப் பேச்சுப் பேசியவர். ஆனால் சென்ட் சபைத தேர்தலிலோ முதலாவது வோட்டுக்கள் எண்ணப்பட்டபோதே முதன்மையாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது பொதுத் தேர்தலில் தோல்வியுற்ற மற்றொருவரான திரு. ஏ. ஆர். ஏ. ராஸிகும் சென்ட்டராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார் திரு. எம். ஏ. எல். காரியப்பருக்கும், டாக்டர். எம். ஜி. பெரைராவுக்கும் ஒரேவிதமான எண்ணிக்கையுள்ள வோட்டுகள் கிடைததால் அதிர்ஷடச் சீட்டுப் போடடுப்பார்க்க அவர்கள் சம்மதித்தார்கள். அதிர்ஷடச் சீட்டுப் போட்டதில் டாக்டர். எம். ஜி பெரைரா தெரிந்தெடுக்கப்பட்டார்.

ஒரு பார்லிமெண்டரி காரியதரிசி அளித்தவோட்டு செல்லாது போய்விட்டது என்று தெரிய வருகிறது. ஏனெனில அவர் தவறுதலாக தேர்தல் அதிகாரியின் கையெழுத்துக்குக் கீழே தனது கையெழுத்தைப் போட்டுவிட்டார் ஆகவே அந்த பார்லிமெண்டரி காரியதரிசியின் வோட்டுச் சீட்டை தேர்தல் அதிகாரி தள்ளிவிட்டார்.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குப் புறம்பான பூரண சுதந்திரம்

பர்மாவில் சோஷியலிஸ்ட் குடியரசு ஸ்தாபிக்கப்படும்

பிரதம மந்திரி தக்கின் நு பிரசங்கம்

லண்டன், அக். 16

பர்மா ஜனுவரி மாதம் பரிபூரண சுதந்திரமடைவதால் அதை யொட்டி செய்யப்பட்ட ஆங்கிலோ—பர்மா உடன்படிக்கையில் நாளை பிரிட்டிஷ் பிரதமர் அட்லியும் பர்மா பிரதமர் தக்கின் நு வும் கைச்சாத்திடுவார்கள். இன்று தக்கின் நு பிரிட்டிஷ் சர்க்காரின் பர்மா மந்திரியான லார்டு லிஸ்டோவலைச் சந்தித்துப் பேசினார். பர்மா நிதி மந்திரி, தலைமையில் இங்கு முன்னமே வந்துள்ள தூதுக் கோஷ்டியையும் சந்தித்துப் பேசினார். சமீபத்தில் கைச்சாத்திடப்பட்ட பாதுகாப்பு ஒப்பந்தப்படி பிரிட்டன் சுதந்திர பர்மாவின் பாதுகாப்புப்படைகளுக்கு ராணுவப் பயிற்சி அளிக்க உதவபுரியும். நாளை செய்யும் உடன்படிக்கையில் பாதுகாப்புநிதி, பிரஜா உரிமை, வர்த்தக சம்பந்தம், ஒப்பந்த விஷயமான கடமைகள் இவைகள் பற்றிய விதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன பிரிட்டிஷ் சாம்ராஜ்ய சம்பந்தமில்லாத பரிபூரண சுதந்திரத்தை ஜனுவரியில் பர்மா அடையும்.

சோஷியலிஸ்ட் குடியரசு

ரங்கூன், அக். 16

சில தினங்களுக்கு முன் பிரதம மந்திரி தக்கின் நு இங்கு பேசியபோது சுதந்திர பர்மாவில் எவ்வித அரசாங்கம் நிறுவப்படும் என்பதைக் குறித்து பின்வருமாறு தெரிவித்தார்:- பர்மாவில் முதலாளித்துவம் ஒழித்துக் கட்டப்படும். இடதுசாரிகளின் ஆட்சி நிறுவப்படும் இடதுசாரியென்றால் கமியூனிஸ்ட் ஆட்சியல்ல சோஷியலிஸ்ட் குடியரசு நிறுவப்படும்.

70 வருட பிரிட்டிஷ் ஆட்சிக்குப் பின் வரும் ஜனுவரியில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குப் புறம்பான சோஷியலிஸட் குடியரசை பர்மா நிறுவும். பர்மாவின் பொருளாதாரச் சீர்கேடான நிலைமையைப் போக்க கைத்தொழில்கள் தேசிய மயமாக்கப்படும். பர்மா செழிப்பான தேசம். ஆனால் பர்மிய மக்களோ பரமதரித்திரர்களாக இருக்கிறார்கள், நாட்டின் செல்வம முதலாவது பிரிட்டிஷ் முதலாளிகளாலும் பின்னர் இந்திய முதலாளிகளாலும் சீன முதலாளிகளாலும் அனுபவிக்கப்பட்டது. ஆகவே சோஷியலிஸட் பர்மா இந்த முதலாளிகளுக்குப் பதிலாக பர்மிய முதலாளிகளை சிருஷடிக்க விரும்பவில்லை.

கராச்சி, அக். 15

27 வருட காலமாக தேசப் பிரஷ்டம் செய்திருந்த தேசபக்தரும் புரட்சிக்காரருமான இக்பால் ஷாஹெய்தெய் இங்கு வந்தார். அவருக்கு அதி விமரிசையான வரவேற்பு அளிக்கப்பட்டது.

அமெரிக்காவை அரேபியா மன்னர் தாக்குகிறார்

அரேபிய உடையில் ஆஜராகி அரபு பாஷையில் அறைகூவினார்

பாலஸ்தீனத்தை பிரிட்டன் நிச்சயம் கைவிடும்

நியூயார்க், அக் 17

ஐக்கிய தேச பாலஸதீனக் கமிட்டிக் கூட்டத்தில் பிரிட்டிஷ் குடியேற்றநாட்டு மந்திரி ஆர்தர் கிரீச் ஜோன்ஸ பின்வருமாறு தெரிவித்தார்.- பாலஸதீனத்தின் பாதுகாப்பு நிர்வாகத்தைப் பிரிட்டன் கைவிடக் தீர்மானித்து விட்டது. அதைப் பற்றி எவருக்கும் சந்தேகம் வேண்டாம் சில அரசாங்கங்களின் ஒத்துழைப்பின் மீது யூதர்கள் ஏராளமாக கப்பல்களில் புறப்பட்டு சட்ட விரோதமாக பாலஸதீனத்தில் குடியேற வருகிறார்கள் இது மிக்க அபாயகரமான நிலைமையாகும், நிர்வாகத்தைச் சீர்குலைக்கவே அந்த அரசாங்கங்கள் அப்படிச் செய்கின்றன பாலஸதீனப் பிரச்னையை துரிதமாகத் தீர்க்க வேண்டும். அது சம்பந்தமாக பிரிட்டன் தனது அனுபவத்தைக் கொண்டு யோசனை கூறி உதவி செய்யத் தயாராக இருக்கிறது. பிரிட்டன் நிர்வாகத்திற்குப் பதில் ஐக்கிய தேச நிர்வாகத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

சுஊதி மன்னர் எச்சரிக்கை

சுஊதி அரேபியாவின் மன்னர் எமீர் பெய்சல் இன்று அரேபிய உடையில் ஆஜராகி அரபு பாஷையில் அமெரிக்காவைத் தாக்கிப் பின்வருமாறு பேசினார்:-

பாலஸதீனப் பிரச்னையில் அமெரிக்கா கையாண்டு வரும் கொள்கை அக்கிரமமாக இருக்கிறது. யூத ஸதாபனங்கள் செய்து வரும் பயங்கரப் புரட்சி செயல்களையும் அடடூழியங்களையும் பற்றி அமெரிக்கா எதுவும் தெரிவிக்காமல் வாய்மூடிக் கொண்டிருப்பதன் உட்கருத்தென்ன? உலகுக்கு நன்மை செய்வதாக அமெரிக்கா தன்னை விளம்பரப் படுத்திக் கொள்வதில் உண்மையிருக்குமானால் யூத அகதிகள் வந்து குடியேற அமெரிக்க சர்க்கார் அமெரிக்காவில் சென்று இடங்கொடுக்கலாகாது; பாலஸதீனத்தை விட அமெரிக்கா விசாலமானதும் செழிப்புள்ளதுமான நாடல்லவா?

தென்னாப்பிரிக்கா

பாலஸ்தீன பிரிவினைத் திட்டத்தை சில திருத்தங்களுடன் தென்னாப்பிரிக்கா வரவேற்பதாக தென்னாப்பிரிக்க பிரதிநிதி தெரிவித்தார்.

கானடா

பாலஸ்தீனம் ஐக்கிய தேச தாம கர்த்தா கமிட்டி நிர்வாகத்திலிருக்க வேண்டுமென்றும் பாலஸதீன அறிக்கையை பரிசீலனை செய்து சிபார்சுகளை அக்டோபர் 27-ம் தேதிக்குள் சமர்ப்பிக்க ஒரு சப கமிட்டி நியமிக்க வேண்டுமென்றும் கானடா பிரதிநிதி தெரிவித்தார். (ராய்ட்டர்)

எலிஸபெத் இளவரசி விவாகம்

கத்தோலிக்கர்கள் குறை

எலிஸபெத் மகாராணிக்கு தேக அசௌக்கியம்

லண்டன், அக் 16

வக்திக்கான் ரேடியோ கீழ்கண்ட செய்தியை ஒலிபரப்பியது:- நவம்பர் மாதம், நடைபெறவிருக்கும்எலிஸபெத் இளவரசி கலியாணத்தையொட்டி மீண்டும் ஆங்கிலக் கத்தோலிக்கர்களுக்கு சங்கடமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தில் அநேக ஸ்தாபனங்களுக்கு மன்னருக்கு நேராகச் செய்தி அனுப்பும் உரிமை இருந்துவருகிறது. இவ்வித உரி

சுதந்திர பர்மா ஜனனம்

ஜனுவரி 6-ம் தேதி 11-56 மணிக்கு

ரங்கூன், அக். 17

பர்மா சுதந்திரக் குடியரசு ஜனுவரி 6-ம் தேதி 11-56 மணிக்கு ஜனனமாகிறது. அப்பொழுது பிரிட்டன் தன் அதிகாரத்தை பர்மா மக்கள் கைக்கு மாற்றும்.

சுதந்திர தினத்தன்று நாடெங்கும் கொண்டாட்டங்கள் நடைபெறும். (ராய்ட்டர்)

மையுள்ள ஸதாபனங்கள் ஆங்லிக்கன் சர்ச், பிரீ சர்ச்சுகளின் பிரதிநிதிக் கோஷ்டி, இரு யூதர் ஸதாபனங்கள், ஆனால் கதோலிக்கர்கள், கருதினாலர்கள், குருமார்கள் இவர்களுக்கு அவ்வித உரிமையில்லை. லடசக்கணக்கான கதோலிக்கர்கள் மன்னரின் பிரஜைகளாக இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த உரிமை மறுக்கப்பட்டிருப்பது பெருங் குறையாகும்.

எலிஸபெத் இளவரசி 50 வயதுடைய லெப்டினென்ட் ஜெனரல் ஸர் பிரடரிக் ஏ. எம். பிரௌணிங்கை தனது அரண்மனை கண்டரோலராகவும் பொக்கிஷதாரராகவும் நியமித்திருக்கிறார். 'ரெபேக்கா' முதலிய பல நாவல்களை எழுதிய நாவலாசிரியையான ஸ்ரீமதி குமௌரியர் ஜெனரல் பிரௌணிங்கின் மனைவி ஜனுவரி முதல் தேதி பிரௌணிங்க இப்புதிய பதவியை ஏற்றுக்கொள்வார்.

ஹாங்காங் சட்ட சபை எலிஸபெத் இளவரசி விவாகப் பரிசிற்கு ஐம்பதினாயிரம் டாலர் (3125 பவுண்) செலவு செய்ய அனுமதித்திருக்கிறது. இதில் ஒரு பகுதி மட்டும் விவாகப் பரிசுக்கு செலவு செய்துவிட்டு மீதத்தை எலிஸபெத் இளவரசி தெரிவித்த அபிப்பிராயப்படி ஹாங்காங்கில் குழந்தைகள் பராமரிப்பிற்காகச் செலவிடப்படும்.

எலிஸபெத் மகாராணிக்கு தேக அசௌக்கியம்

எலிஸபெத் மகாராணிக்கு மார்ச்சளி ஏற்பட்டிருப்பதால் அவர் இன்று லண்டன் சங்கீதக் கல்லூரியில் நடைபெறற சங்கீதக் கச்சேரிக்குச் செல்லவில்லை. (ராய்ட்டர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்

THE "SUTANTIRAN"

194 ஏ, தட்டாத் தெரு, கொழும்பு.
போன்: 3411.

சர்வஜித்து ஹு ஐப்பசி மீ 1உ
சனிக்கிழமை

வாக்குறுதி எங்கே?

சென்ற ஆனி மாதத்தில் அரசாங்கக் குமாஸ்தாக்கள் தங்களுக்குத் தொழிற்சங்க உரிமை வேண்டி வேலை நிறுத்தஞ் செய்தார்கள். அவ்வுரிமைப் போராட்டத்தில்தான் கந்தசுவாமி உயிர் துறந்தான் என்பதும் யாவருக்கும் ஞாபகமிருக்கலாம்.

அச்சமயத்தில் உத்தியோகஸ்தர்களை மறுபடியும் வேலையில் வந்து சேரும்படி மேல் உத்தியோகஸ்தர்கள் கேட்டுக்கொண்டார்கள். குறிப்பிட்ட காலத்திற்குள் வந்துசேராவர்களுக்கு தண்டனை விதிக்கப்பட மாட்டாதென்றும் கூறப்பட்டது. அத்துடன் அவர்களுக்குத் தொழிற் சங்க உரிமை வழங்குவதா இல்லையா என்பது புதிய பாராளுமன்றத்தில் தீர்த்துவைக்கப்படுமென்றும் வாக்களிக்கப்பட்டது.

இவ்விரு வாக்குறுதிகளில் முதலாவது வாக்குறுதி காற்றில் விடப்பட்டாயிற்று என்றே கூறவேண்டியிருக்கிறது. ஏன்? வேலை நிறுத்தஞ் செய்து, திரும்பி வந்தவர்கள் பலரை வேற்றிடங்களுக்கு அரசாங்கம் மாற்றிவிட்டது. அவர்களுக்கு சம்பள உயர்வு தடுக்கப்பட்டுவிட்டது. இவர்களது சங்கம் சட்டவிரோதமானதென்று விதிக்கப்பட்டுள்ளது.

இத்தனையும் செய்தவர்கள் பழைய அரசாங்க சபை மந்திரிகளாவர். இப்பொழுதும், இரண்டொருவரைத் தவிர்த்து அவர்களே மீண்டும் மந்திரிகளாக வந்துள்ளனர். புதிதாக மந்திரி சபையினுள் புகுந்த இரண்டொருவரும் பிரதம மந்திரி சேனநாயக்காவின் விருப்பத்திற்கு மாறாக ஒன்றுஞ் செய்ய முடியாது. செய்தால் அவர்களைப் பதவியிலிருந்து கலைப்பதற்குப் பிரதம மந்திரிக்கு அதிகாரமுண்டு.

புதிய மந்திரிகள் பதவி ஏற்றதும் வேலை நிறுத்தத்தில் பங்கு பற்றிய வருள் முதன்மையானோருக்கு எதிரானநடவடிக்கைகள் எடுக்கத் தொடங்கிவிட்டார்கள் எனப் பல புகார்கள் நமக்கு எட்டுகின்றன. இது அரசாங்கக் குமாஸ்தாக்களின் நலனுக்கோ அல்லதுதேசத்தின் க்ஷேமத்துக்கோ நன்மை பயக்காது என்பது திண்ணம்.

தேர்தலை முன்னிட்டு அதிகாரிகள் மௌனஞ் சாதித்திருந்தார்கள். இப்பொழுது ஒவ்வொரு இலாகா அதிகாரியும் தத்தம் இலாகாவில் உள்ள வேலை நிறுத்தக்காரர்களை விசாரணை செய்வதாகவும் சொல்லப்படுகிறது வேலை நிறுத்தம் நடந்து நான்கு மாதங்களுக்குப் பின்தானா இந்த ஞானம் அதிகாரிகள் மனதில் உதிக்க வேண்டும்?

இற்கிடையில் அடுத்த வாரம் மந்திரி சபை கூடும் பொழுது அரசாங்கக் குமாஸ்தாக்கள் தொழிற்சங்க உரிமை சம்பந்தமாக விவாதிப்பார்கள் என்றும் ஒரு பேச்சு கிளம்பியுள்ளது. தொட்டிலையும் ஆட்டிப் பிள்ளையையும் கிள்ளும் செய்கைகளால் மந்திரிகள் பொது ஜனங்களை ஒரு வேளை ஏமாற்றலாம். ஆனால் படித்த குமாஸ்தாக்களையும் மற்றவர்களையும் ஏமாற்ற முயற்சிப்பது முட்டாள்தனமாகும். இவ்விஷயத்தில் மந்திரிகள் உத்தரவில்லாமல் இலாகாத் தலைவர்கள், தங்கள் குமாஸ்தாக்கள் மீது நடவடிக்கைகள் எடுக்க ஏதாவது அதிகாரமுண்டா? முன்பு வேலை நிறுத்த விசாரணை சபையார் "குற்றவாளி"களை விசாரித்தனர். இச்சபையாரை விலக்கி இப்பொழுது இலாகா அதிகாரிகள் வேலை நிறுத்தக்காரர்களை விசாரணை செய்ய அனுமதி கொடுத்தவர்கள் யார் என்று மந்திரி சபையைப் பொதுஜனங்கள் கேட்கிறார்கள். மந்திரிகள் பதிலளிப்பார்களா?

சென்ற பொதுத் தேர்தலில் இந்த அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்குத் தொழிற்சங்க உரிமை வாங்கித் தருவதாக வாக்களித்துப் பாராளுமன்றத்தில் புகுந்தவர்கள் பலர் இருக்கிறார்கள். மந்திரிகளுடைய நிலைமை சரியாக இல்லை; நாட்டின் பொருளாதார நிலைமையும் சரியாகவில்லை. பொருளாதார நிலையைக் காட்டி வேலை நிறுத்தக்காரர்களை மந்திரிகள் அகற்றுவிக்கவும் கூடும். இந்நிலைமையில் தொழிற்சங்க உரிமை பெற்றுக் கொடுக்க வாக்களித்த பிரதிநிதிகள் என்ன செய்யப் போகிறார்கள்? அரசாங்கக் குமாஸ்தாக்களைக் கைவிடுவார்களா? அல்லது சேனநாயக்கா அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவார்களா?

இந்தியாவின் பிரச்னைகளை தீர்க்க மிர்ஸா யோசனை

தலைவர்கள் மகாநாடு கூட்ட வேண்டும்

வெளிநாட்டுத் தலைவர்களையும் அழைப்போம்

சென்னை, அக். 15

இந்தியாவின் பிரச்னைகளைத் தீர்க்க வேண்டுமென்றால் இந்தியாவிலிருந்தும் வெளியிலிருந்தும் தலைவர்களைக் கூட்டி ஒரு மகாநாடு நடத்தவேண்டுமென்று ஸர் மிர்ஸா இஸ்மாயில் ஒரு யோசனையைத் தெரிவித்திருக்கிறார்.

இம்மகாநாட்டுபட்சபாதமின்றி இந்தியா, பாக்கிஸ்தான் நிலமையை பரிசீலனை செய்யமுடியும் என்று அவர் அபிப்பிராயபடுகிறார்.

இம்மகாநாட்டில் யார் யார் இருக்கலாம் என்பதுபற்றி அவர் கூறுவதாவது:- இரு கவர்னர் ஜெனரல்கள், இரு பிரதம மந்திரிகள், இந்தியசமஸ்தானங்களின் பிரதிநிதிகள் இரண்டொருவர், வெளிநாடுகளிலிருந்து மூன்று பிரதிநிதிகள், அமெரிக்காவிலிருந்து ஹூவர் அல்லது பிலிப்ஸ் அல்லது ஸ்மனர் வெலஸ் ஆஸ்திரேலியாவிலிருந்து ஈவாட் அல்லது கேஸி, ஐ' நா. விலிருந்து டிரிகிவ்லி

மகாதமாவும் இம் மகாநாட்டில் கலந்துகொள்ளவேண்டும். பாக்கிஸ்தானும் இந்தியாவும் சேர்ந்து கேட்டுக்கொண்டால் அவர்கள் கட்டாயம் வருவார்கள் என்றும் அவர் கூறுகிறார்.

'ஹிட்லர்' மீது வழக்கு!

"ஈவாபிரான்" ஆஜராகவில்லை

டர்பான், அக். 16

"ஈவாபிரான்" என்ற மாதை அடித்து, அவளது வீட்டுத் தளவாடங்களையும் சேதப்படுத்தியதாக "ஏ. ஹிட்லர்" என்ற ஆப்பிரிக்கர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

ஆனால் ஈவாபிரான் விசாரணையின்போது சாட்சியம் அளிக்க ஆஜராகவில்லை.

இதன் காரணமாக வழக்கு தள்ளுபடியாயிற்று.

(ராய்ட்டர்)

சீனக் கடல் மீது பிரிட்டிஷ் கப்பல்களின் ஆசை

நாங்கிங, அக். 15

சீனக் கடற்கரைத் துறைமுகங்களில் பிரிட்டிஷ் கப்பல்கள் செய்யும் போக்குவரத்தை சீனக் கப்பல் போக்குவரத்தை முன்னிட்டு சீன சர்க்கார் அதிகக் கட்டுப்பாடு செய்து வருவதால் சீன-பிரிட்டன் வர்த்தக உடன்படிக்கை இன்னும் முடிவாகவில்லையென்று லார்டு அம்மன் தெரிவித்ததுபற்றி சீன அதிகாரி யொருவர் பின்வருமாறு கூறினார்:- சீனக் கடற்கரையில் சீனக் கப்பல்களுக்கு உரிமையுண்டு என்பது லார்டு அம்மனுக்குத் தெரியும். பிரிட்டிஷ் கப்பலுக்கு இடமே கொடுக்காது சீனா கதவடைத்து விட்டது என்று பிரிட்டிஷ் தூதுக் கோஷ்டித் தலைவர் லார்டு அம்மன் தெரிவிக்கவில்லை.

கடற்கரையோரக் கப்பல் போக்குவரத்தில் எந்த அந்நிய நாட்டுக் கப்பல் கம்பெனிகளுக்கும் உரிமை கிடையாது என்றும் சீனக் கப்பல் கம்பெனிகளுக்கே அவ்வுரிமை யுண்டென்றும் சீன பார்லிமெண்ட் காரியதரிசி டாக்டர் லோ டுங் ஸுன் தெரிவித்தார்.

(ராய்ட்டர்)

இந்தியா-லங்கா கப்பல் கம்பெனி

பன்னிரண்டரை லட்சம் பவுண் மூலதனம்

மலேயா தொழிற் சங்கத் தலைவர்களான இரு தமிழர்கள் டைரக்டர்கள்

கொழும்பு-சிங்கப்பூர் பிரிட்டிஷ் விமானப் போக்குவரத்து

இலங்கை சோல்ஜர்கள் சிங்கப்பூர் போலிசாரைச் சுட்டனர்

சிங்கப்பூர், அக். 16

பன்னிரண்டரை லட்சம் பவுண் மூலதனமுள்ள ஒரு பெரிய கப்பல் கம்பெனி இங்கு நிறுவப்பட்டிருக்கிறது. அகில இங்குள்ள பிரபல தொழிற் சங்கத் தலைவர்கள் இருவர் டைரக்டர்களாக இருக்கிறார்கள் என்று 'ஸ்ட்ரெயிட் டைம்ஸ்' பத்திரிகை அறிவிக்கிறது. அந்த இரு டைரக்டர்களும் பின்வருமாறு:-

(1) திரு. வீர சேனன்; இவர் சிங்கப்பூர் தொழிற் சங்கங்களின் சம்மேளனத்தின் உப தலைவரும் சிங்கப்பூர் துறைமுகத் தொழிலாளர் சங்கத் தலைவருமாவார். அகில மலேயா தொழிலாளர் சங்கங்களின் சம்மேளனத்தை நிறுவ இவர் சமீபத்தில் மலேயாவிலுள்ள துறைமுகங்களுக்கு விஜயம் செய்து பார்வையிட்டார்.

(2) திரு சுந்தர ராஜு; இவர் சிங்கப்பூர் நகர சுத்தித் தொழிலாளர் சங்கத் தலைவர். இந்தப் புதிய கம்பெனிக்கு இந்தியா-லங்கா கப்பல் கம்பெனி என்று பெயர். இக் கம்பெனி சகலவிதமான கப்பல்களின் போக்குவரத்து நடத்த திட்டம் போட்டிருக்கிறார்கள்.

விமானப் போக்குவரத்து

லண்டன், அக். 16

பி. ஓ. ஏ. ஸி. விமானக் கம்பெனியார் (பிரிட்டிஷ் கம்பெனி) அக்டோபர் மாதக் கடைசியில் இலங்கைக்கும் சிங்கப்பூருக்குமிடையே விமானப் போக்குவரத்து ஆரம்பிக்கிறார்கள். இப்பாதையில் வாரத்துக்கு ஒரு தடவை போக்குவரத்து நடைபெறும். கொழும்பிலிருந்து வியாழக்கிழமைதோறும், சிங்கப்பூரிலிருந்து சனிக்கிழமைதோறும் விமானம்புறப்படும். பிரிட்டனிலிருந்து இலங்கைக்கு வாரந்தோறும் வரும் பிரிட்டிஷ் விமான சர்வீஸ் இந்த இலங்கை-சிங்கப்பூர் விமானப் பாதையுடன் இணைக்கப்படும். இலங்கைக்கும் சிங்கப்பூருக்குமிடையே 1700 மைல் தூரத்தை இடையே தங்காமல் ஒரேயடியாக ஒன்பதரை மணி நேரத்தில் விமானம் கடந்துசெல்லும். முதல் விமானம் அக்டோபர் 30-ம் தேதி கொழும்பிலிருந்து புறப்படும்.

சிங்கப்பூர் போக ஆளொன்றுக்கு 48 பவுண் கட்டணம் போக வர 86 பவுண்.

இலங்கை சோல்ஜர்கள் போலிசாரைச் சுட்டனர்

சிங்கப்பூர், அக். 16

சிங்கப்பூர் நகருக்கு வெளியே உள்ள ராணுவத் தளவாட டெப்போவைக் காவல் செய்யும் 5 இலங்கை சோல்ஜர்கள் நேற்று அந்த டெப்போவில் திருடுவதற்கு வந்தவர்களை போலிசார் கைதுசெய்ய முயற்சிக்கும்போது, போலிசார்மீது துப்பாக்கி கொண்டு சுட்டனர் இரு போலிஸ்காரர்களுக்கு காயமேற்பட்டது. திருடர்கள் தப்பி ஓடிவிட்டார்கள். உடனே அதிகப்படியான போலிசார் அவ்விடத்திற்கு வந்து அந்த 5 இலங்கை சோல்ஜர்களையும் இரு திருடர்களையும் கைதுசெய்தனர். இரு திருடர்களில் ஒருவர் இலங்கை சார்ஜன்டு. இவர் சிவில் உடை அணிந்திருந்தார்.

பிரிட்டிஷ் சோல்ஜர்களுக்குப் பதிலாக ராணுவ தளங்கள் டெப்போக்கள் முதலியவற்றை காவல் புரிய இலங்கைத் துருப்புகள் சென்ற மாதம் இங்கு வந்தனர்.

சீனக் கப்பலில் தீ

10பிரயாணிகள் மறைந்தனர்

நாங்கிங, அக் 15

அமோய் அருகே ஒரு சீனக் கப்பல் தீப்பற்றி எரிந்து கடலில் மூழ்கியதில் 10 பிரயாணிகளைக் காணவில்லை. அதிலிருந்த 70 பேர்களில் 10 பேர்கள் அபாயப் படகுகளில் ஏறிக்கொண்டு உயிர் தப்பினர். 50 பேர்களை வழியில் சென்ற மற்ற கப்பல்கள் காப்பாற்றின. சூறாவளிக் காற்றுக்காக அமோய் வந்து ஒதுங்கிய இக்கப்பல் தீ விபத்திற்குள்ளாயிற்று.

(ராய்ட்டர்)

பிரிட்டனுக்கு பிலிப்பைன அரிசி

படேவியா, அக். 15

பிரிட்டனுக்கு பிலிப்பைனிலிருந்து பதினாயிரம் டன் அரிசியும் அமெரிக்காவிலிருந்து பதினேழாயிரம் டன் அரிசியும் வாங்குவது சம்பந்தமாக இங்குள்ள பிரிட்டிஷ் ஸ்தானிகத்தைச் சேர்ந்த வர்த்தக அதிகாரிபிரிட்டிஷ் உணவு டைரக்டரைக் கலந்து பேச லண்டனுக்குப் பயணமானார்.

(ராய்ட்டர்)

ஜப்பான் சமாதான மகாநாடு

நியூயார்க், அக். 15

ஆஸ்திரேலிய அந்நியநாட்டு மந்திரி எவாட் பின்வருமாறு தெரிவித்தார்:- ஜப்பான் சமாதான மகாநாட்டை கூடிய சீக்கிரம் கூட்ட வேண்டுமென்று நான் அமெரிக்க ஜனாதிபதட்ரூமனையும் அந்நியநாட்டு மந்திரிமார்களையும் துரிதப்படுத்தியிருக்கிறேன். மகாநாட்டை பெர்ல் ஹார்பரில் கூட்டும் யோசனையை நான் ஆட்சேபிக்கவில்லை. ஜனுவரிக்கு முன்பே மகாநாட்டைக் கூட்ட வேண்டுமென்று சொன்னேன்.

[ராய்ட்டர்]

கொட்டாவா கள்வர் தலைவன் கைது

எஸ்டேட் குடிசையில் துயின்று கொண்டிருந்தான்

கொழும்பு, அக். 18

கொட்டாவா பகுதியில் இருந்த பிரபல கள்வனும், அபாயகரமான குற்றவாளியுமான காரா என்னும் கலகத ராஜ கார்தேலிஸ என்பவரை நேற்று முன்தினம் பிற்பகல் பணிப்பிட்டியா எஸ்டேட்டில் வைத்து போலிஸார் கைது செய்தனர். நேற்று இவர் கோர்ட்டில் ஆஜர்செய்யப்படும் வரையும் மருதானை போலிஸ் ஸடேஷனில் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

மேயர் திரு ஆர். எப். எஸ். டி மெல் அவர்களுக்குச் சொந்தமானதென்று கூறப்படும் ஒரு தென்னந் தோட்டத்தில் இருந்த குடிசையில் இவர் நித்திரையாக இருந்ததாகவும் போலிஸ் அதிகாரி ஒருவர் தலைமையில் சென்ற போலிஸ் கோஷ்டி இவரைக் கைது செய்ததாகவும் கூறப்படுகிறது போலிஸார் இவரைக் கைது செய்ததபோது இவரிடம் ரிவால்வர் இருந்ததாகவும் போலிஸ அதிகாரி அதனைக் கைப்பற்றியபின்னர் அவரைக் கைது செய்ய முடிந்ததென்றும் அதன்பின் கள்வர் தலைவன் எதிர்க்கவில்லை யென்றும் தெரிகிறது.

கடலில் விழுந்த அமெரிக்க விமானம்

பிரயாணிகள் யாவரும் மீட்கப்பட்டனர்

நியூயார்க், அக். 15

வடஅட்லாண்டிக் சமுத்திரத்தில் விழுந்த அமெரிக்க விமானத்திலிருந்த எல்லா பிரயாணிகளும் சிப்பந்திகளும் மீட்கப்பட்டனர். (ராய்ட்டர்)

பாலம் திருத்தி அமைக்க கிராம மக்கள் பணஉதவி

நூரளை, அக். 16

பூண்டுலோயா, கொத்மலே ஆகிய கிராமங்களை ரம்பொடையுடன் இணைக்கும் கொஸகலை பாலம் ஆகஸ்ட் வெள்ளத்தின்போது பலத்த சேதமடைந்துவிட்டதால் நூரளைப் பகுதி பிரயாணிகளுக்கு வசதியினம் அதிகரித்துள்ளன. இங்கு புதிய பாலம் அமைக்க ரூபாய் 25,000 வேண்டுமென்றும் இதில் ஒரு பகுதியை கிராம மக்கள் கொடுப்பதற்கு ஒரு சங்கம் ஸ்தாபிக்கப் பட்டுள்ளதென்றும் கூறப்படுகிறது.

இந்தியக் கப்பல்களுக்கு அதிக சரக்குகள்

இந்திய சர்க்கார் ஆதரவு

புதுடில்லி, அக். 15

இந்தியக் கப்பல் கம்பெனிகள் ஏராளமான கப்பல்களைக் கட்ட இந்திய சர்க்கார் ஆதரவளிக்க முன் வந்திருக்கிறார்கள். இந்தியக் கப்பல்களில் அதிக சாமான்களை ஏற்றிப் போக்கு வரத்து நடத்தவும் உதவி செய்கிறார்கள். ஜப்பானுக்கும் இந்திய சர்க்கார் அனுப்பும் 1,70,000 டன் பருத்தி இந்தியக் கப்பல்களில் ஏற்றிச் செல்லப்படும். அதற்குப் பதில் ஜப்பானிலிருந்து வரும் சாமான்களும் இந்தியக் கப்பல்களிலேயே வரும். இந்தியா வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் உணவுப் பொருட்களையும் இந்தியக் கப்பல்களே கொண்டுவரும். இந்தியா 100 கோடி ரூபாய்க்கு உணவுப் பொருள் வாங்குவதில் 10 கோடி ரூபாய் கப்பல் கட்டணமாக செலுத்தப்படுகிறது. இப்பணம் இனி வெளி நாட்டுக் கப்பல் கம்பெனிகளுக்குப் போகாமல் இந்திய கப்பல் கம்பெனிகளுக்குக் கிடைக்கும்.

சர்க்கார் ஆதரவு இருப்பதால் அநேக இந்தியக் கப்பல் கம்பெனிகள் அதிக கப்பல்களை வாங்கவும் தங்கள் மூலதனத்தைப் பெருக்கவும் முன்வருகின்றன. எஸ்திதியா ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனியார் தங்கள் மூலதனத்தை 15 கோடிக்கு விஸ்தரிக்கப் போகிறார்கள்

இன்னும் 5 அல்லது 7வருடங்களுக்குள் இந்தியாவில் கடலோரக் கப்பல் வர்த்தகம் முழுதும் இந்தியக் கப்பல்களாலேயே நடைபெறும். பர்மாவுடன் நடைபெறும் போக்கு வரத்தில் முக்கால் பங்கு இந்தியக் கப்பல் கம்பெனிகள் கைப்பற்றும். இலங்கை முதலிய சமீப நாடுகளின் போக்கு வரத்தின் அரை வாசியையும் தூர நாடுகளின் போக்குவரத்தில் 30 சத விகிதமும் இந்தியா கைப்பற்றும். அதாவது முன்னர் கிழக்குலகத்தில் அச்சு நாடுகள் நடத்தி வந்த போக்கு வரத்தில் இவ்வீதாச்சாரங்கள் இந்தியக் கப்பல்களால் கைப்பற்றப்படும்.

சீனத்தில் மெக்ஸிகோ தங்கம் பிடிபட்டது

ஷாங்கை, அக். 15

அமோய் துறைமுகமானபூக்கின்ஸில் சுங்க அதிகாரிகள் 332 அவுன்ஸ் எடையுள்ள 40 தங்கக் கட்டிகளைக் கைப்பற்றினர். பிலிப்பைனிலிருந்து இங்கு வந்த சீனக் கப்பலை சோதனையிட்டதில் தங்கம் கைப்பற்றப்பட்டது. [ராய்ட்டர்]

மதம் வேறு; பிரஜா உரிமை வேறு

இந்திய அரசாங்க அமைப்பு

புதுடில்லி, அக். 15

"மதம் ஒவ்வொருவரின் சொந்த விஷயம். அதற்கும் பிரஜா உரிமைக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. அப்படிப்பட்ட ஸ்திரமான ஒரு ராஜாங்கத்தையே நாம் நிர்மாணிக்க விருப்புகிறோம்.

"நமது சுதந்திரத்தின் இந்த ஆரம்ப கட்டத்தில் உள் நாட்டில் குழப்பமிருப்பது நமக்கு அனுகூலமல்ல. சட்டத்திற்கும் ஒழுங்குக்கும் எர்தவிதமான ஆபத்தும், அது எங்கிருந்து வந்தாலும்சரி, யுத்தத்திற்குப் பின் அவசர தேவையாக உள்ள புனருத்தாரணத்தை அசாத்யமானதாக செய்துவிடும்" என்று இந்தியாவிலுள்ள மாகாண, ஜில்லா காங்கிரஸ கமிட்டிகளுக்கு, ராஷ்டிரபதி ஆச்சாரிய கிருபளானி அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறுகிறார்.

மஞ்சூரிய யுத்தம்

நாங்கிங, அக் 15

அமெரிக்கரிடம பயிற்சி பெற்ற சீனத் துருப்புகள் கமியூனிஸ்டுகள் கைப்பற்றியிருந்த உலிங்கை மீட்டனர்

[ராய்ட்டர்]

திரு. அந்தோனிப்பிள்ளை அப்பீல்

தண்டனை குறைப்புக்கு உத்தரவு

சென்னை, அக். 15

சென்னை தொழிற் சங்கத் தலைவர் திரு. எஸ். ஓ. ஸி. அந்தோனிப்பிள்ளை தாக்கல்செய்த அப்பீலில் செஷன்ஸ் ஜட்ஜ் திரு. டி. எஸ். விஸ்வநாத அய்யர் இன்று தீர்ப்புக் கூறினார். சென்னை மாகாணத்திற்குள் திரு. அந்தோனிப்பிள்ளை பிரவேசிப்பதைத் தடுப்பதாக சென்னை சர்க்கார் பிறப்பித்த உத்தரவை மீறியதற்காக அவருக்கு பூந்தமல்லி சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட் விதித்த தண்டனையை எதிர்த்தே இந்த அப்பீல்

நீதிபதி தமது தீர்ப்பில் எதிரி சர்க்கார் உத்தரவை மீறி குற்றமிழைத்ததாலும் ஒருவருஷ தண்டனை அனுவசியமென்றும் ஏற்கனவே அனுபவித்த தண்டனை போதுமென்றும் கூறினார்.

திரு களத்தூரிரங்க அய்யங்கார் எதிரி தரப்பிலும் திரு. வி. எல். எத்திராஜ சர்க்கார் தரப்பிலும் ஆஜரானார்கள்.

இந்தியத் தலைவர்மீது ஆப்பிரிக்க சர்க்கார் குற்றச்சாட்டு

ஒன்பது கமியூனிஸ்டுகள் மீது ராஜத் துவேஷ வழக்கு

குற்றச்சாட்டுகள் ரத்தாயின

கேப்டவுன், அக், 16

இங்கு ஓர் விசேஷ விசாரணைக் கோர்ட்டின் முன்னர் திரு. ஹாரி அலிகுமாது நாயுடு எனனும் இந்தியர் ராஜதுவேஷக குற்றம் சாட்டி ஆஜர்படுத்தபட்டார். இவர் தெனனாப்பிரிக்கக கமியூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டி அங்கத்தினர். இவருடன் கூட தென்னாப்பிரிக்கக் கமியூனிஸ்டுகளில் வேறு 9 பேர்மீதும் ராஜத்துவேஷக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

திரு நாயுடு ஐக்கிய நாடுகள் சபையின் சென்ற வருஷப் பொதுச் சபைக் கூட்டத்திற்கு தென்னாப்பிரிக்க இந்திய சத்தியாக்ரக இயக்கத்தின் பிரதிநிதியாகச் சென்றிருந்தார். இந்தக் கூட்டத்தில்தான் இந்தியா, தென்னாப்பிரிக்க இந்தியர்களை ஒடுக்கும் தென்னாப்பிரிக்க யூனியன் சர்க்கார் மீது பலத்த குற்றச்சாட்டைக்கொண்டு வந்தது.

எதிரிகள் ஒன்பது பேரும் ஐம்பதினாயிரம் சுதேசிகளை வேலை நிறுத்தம் செய்வதற்குத் தூண்ட முயற்சித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டனர். அத்துடன் அரசாங்க அதிகாரத்தைச் சீர்குலைக்க பலாத்கார நடவடிக்கைகளை அவர்கள் எடுத்துக் கொண்டதாகவும் சொல்லப்பட்டது.

பிரஸ்தாப ஒன்பது பேரில் எட்டுப பேர் கமியூனிஸ்டு மத்திய கமிட்டியைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்பட்டது. மற்றவர் சுங்க வேலை நிறுத்த நிதி திரட்டும் கமிட்டியின் பொறுப்பான உத்தியோகஸ்தர் என்று சொல்லப்பட்டது.

இவர்கள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ஜோஹன்னாஸ்பெர்க்கிலும் கேப்டவுனிலும் ஜனுவரி தொடக்கம் ஜூலை வரை நடந்த ஆரம்ப விசாரணை செல்லுபடியாகக் கூடியதல்ல என விவாதித்தார்.

விசாரணை முடிவில் அட்டார்னி ஜெனரல் எல்லாக் குற்றச் சாட்டுகளையும் வாபஸ் வாங்கினார், நாளை தொடக்கமாகப் புதிய ஆரம்ப விசாரணை ஒன்று நடக்கும்.

அபாய நிலையிலிருக்கும் பாரசீகம்

பார்லிமெண்டின் ரகசிய கூட்டம்

ரஷியா-பாரசீக ஆயில் ஒப்பந்தம் பற்றி விவாதம்

டெஹ்ரான், அக். 16

இன்று பாரசீக பார்லிமெண்டின் கூட்டம் ரகசியமாக நடைபெற்றது. பிரதம மந்திரி கவாம் சுலதானா விஜயம் செய்திருந்தார். வடக்குப் பாரசீகத்தில கிணறுகள் வெட்டி பெட்ரோல் முதலிய ஆயில்கள் உற்பத்தி செய்யபாரசீகமும் ரஷியாவும் சேர்ந்து கூட்டுக் கம்பெனி ஆரம்பித்து நடத்துவது சம்பந்தமாக இரு நாடுகளுக்குமிடையே ஏற்படடுள்ள ஒப்பந்தத்தை ஊர்ஜிதம் செய்வதா வேண்டாமா என்பதுபற்றி பார்லிமெண்டில் அந்தரங்கமாக விவாதம் நடைபெற்றது. அந்த ஒப்பந்தம் சம்பந்தமாக பாரசீக பிரதம மந்திரிக்கும் சோவியத் சர்க்காருக்குமிடையே நடைபெற்ற கடிதப்போக்குவரத்து பற்றி அடுத்த வாரம் கூடும் பார்லிமெண்டின் ரகசியக் கூட்டத்தில் அறிவிப்பதாக பிரதம மந்திரி தெரிவித்தார்.

எதிர்க் கட்சியார், பார்லிமெண்டுக் கூட்டம் பகிரங்கமாக நடைபெறவேண்டுமென்றும் ரஷியாவுக்கு ஆயில் உரிமை வழங்குவதற்கு பிரதம மந்திரி ஆதரவு அளிக்கிறாரா அல்லது மறுக்கிறாரா என்பது தங்களுக்கு விளங்கவில்லை யென்றும் அது மர்மமாக இருக்கிறதென்றும் தெரிவித்தார்கள்.

நாடு மிக அபாயமான நிலைமையிலிருக்கிறதென்றும் ஆதலால் பாரசீக-ரஷிய ஆயில் ஒப்பந்த விஷயத்தில் எவரும் தவறுதலான அபிப்பிராயம் கொள்ளாது ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டுமென்றும் பிரதம மந்திரி பத்திரிகையான "பெர்ஷிய டொமாக்ரட்" எழுதுகிறது.

280 லட்சம் பவுண் செலவில் கட்டப்பட்ட டிரான்ஸ பெர்ஷியன் ரயில்வேயின் 20-வது ஆண்டுவிழா இன்று இங்கு அதிவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. (ராய்ட்டர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜப்பான் அரச குடும்பத்திற்கு மக் ஆர்தர் உத்தரவு

11 இளவரசர்கள் சாதாரண பிரஜைகளாகிறார்கள்

டோக்கியோ, அக். 15

மக் ஆர்தர் ஜப்பான் மன்னர் சம்மதத்தைப் பெற்று, ஜப்பான் அரச குடும்பத்தைச் சேர்ந்த 14 இளவரசர்களுக்கு லட்சக் கணக்கில் சர்க்கார் மான்யம் கொடுப்பதை நிறுத்தி விட்டார். அவர்களில் ஒருவர் ஜப்பான் சரணாகதியாகும் போது பிரதம மந்திரியாக இருந்த இளவரசர் நிகஷிகுனி. இவர் மக் ஆர்தர் ஜப்பான் வந்ததும் உடமைகளை யெல்லாம் மறைத்துவிட்டார். அதன் காரணமாக ஜப்பான் பொருளாதார நிலையை இன்னும் சீர்திருத்த முடியாமல் இன்னும் கள்ள மார்க்கெட்டுகள் பரவிவருகின்றன. இளவரசு நிகஷிகுனி இப்பொழுது மீன் வியாபாரம் செய்து வருகிறார் இந்த இளவரசர்கள் அனைவரும் ஜப்பான் அரசியல், பொருளாதாரக் கைத்தொழில் ஸ்தாபனங்களில் எவ்வித உத்தியோகமும் வகிக்கலாகாதென்று மக் ஆர்தர் உத்தரவிட்டிருக்கிறார். இனி அவர்கள் சாதாரண பிரஜைகள்போல உழைத்து ஜீவனம் நடத்த வேண்டும். (ராய்ட்டர்)

ஆங்கிலோ-அமெரிக்க சுங்கவரி ஒப்பந்தம்

வாஷிங்டன், அக். 16

அமெரிக்க பொருளாதார உதவி மந்திரி கிளேட்டன் தனது பதவியை ராஜினாமா செய்து விட்டார். அவருக்கு நடைபெற்ற பிரிவுபசார விருந்தில் அவர் பேசியபோது, ஆங்கிலோ-அமெரிக்க சுங்கவரி ஒப்பந்தமான பேச்சுகளில் கூடிய சீக்கிரம் சமரசம் ஏற்பட்டுவிடுமென்று தெரிவித்தார். [ராய்ட்டர்]

48 கோடி ரூபாய் அணைக்கட்டுத் திட்டம்

ஓரிசாவில் ஆரம்பமாகிறது

புதுடில்லி, அக். 15

48 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் ஹிராகுத் அணைகட்டும் திட்டம் அடுத்தமாதம் ஓரிசாவில்ஆரம்பமாகிறது. இத்திட்டம் நிறைவேறினால் ஓரிசா 5 வருட காலத்தில் உக்ரைனைப் போன்று உணவு தான்யக் களஞ்சியமாக மாறும். ஆரம்ப வேலைகளுக்காக ஓரிசா சர்க்கார் 25 லட்சம்ரூபாய்க்கு இயந்திரங்கள் வாங்கியிருக்கின்றனர். அடுத்த 5 மாத காலத்தில் 2 கோடி ரூபாய் செலவிடப்படும். அணைக்கட்டு ரயில்வே ஸ்டேஷன், ரயில்பாதை, கைத்தொழிற்சாலைகள், மின்சாரம் வீடுகள் முதலியவை கட்டப்படும். மகாநதி பள்ளத்தாக்கிலுள்ள மூன்று திட்டங்களில் இது ஒன்று. சம்பல்பூர் ஜில்லாவில் 10 லட்சம் ஏக்கர் நிலம் இதனால் சாகுபடியாகும். மூன்றரை லட்சம் வாட்ஸ் மின்சாரம் உற்பத்தியாகும். மகாநதியில் கப்பல் போக்கு வரத்துக்கும் கால்வாய்கள் வெட்டுவதற்கும் ஏற்பாடு செய்யப்படும்.

இளவரசி கலியாணமும் பிரதமர்கள் மகாநாடும்

லண்டன், அக். 15

இளவரசி எலிஸபெத் கலியாணத்திற்கு சாம்ராஜ்ய நாடுகளின் பிரதம மந்திரிகள் விஜயம் செய்யும் போது சாம்ராஜ்ய வர்த்தகத்தையும் பாதுகாப்பையும் பற்றி கலந்து யோசிக்க பிரதமர்கள் மகாநாடு கூட்டுவதென்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் அது இப்பொழுது கைவிடப்பட்டுவிட்டது. அந்த சமயம் ஆஸ்திரேலியா, இந்தியா, நியூஸிலந்து பிரதிநிதிகள் லண்டனுக்கு வர சந்தர்ப்பப்படவில்லை இவ்விஷயத்தை பிரிட்டிஷ் சர்க்கார் கானடா சர்க்காருக்கு அறிவித்திருக்கிறார்கள். (ராய்ட்டர்)

'விவேக அறிவுப் போட்டி நிர் 9.

பரிசு ரூபாய் 2500-00

1ம் பரிசு ரூபா 1150-00	1ம் போனஸ் பரிசு ரூபா 100-00
2ம் பரிசு ரூபா 500-00	2ம் போனஸ் பரிசு ரூபா 50-00
3ம் பரிசு ரூபா 300-00	3ம் போனஸ் பரிசு ரூபா 30-00
4ம் பரிசு ரூபா 200-00	4ம் போனஸ் பரிசு ரூபா 20-00

விசேஷ பரிசு ரூபா 150-00 முடிவு தேதி 6-11-47

பிரவேசக் கட்டணம் ஒவ்வொரு கூப்பனுக்கும் சதம் 50' ரூபா 4-00க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் கூப்பன் அனுப்புபவர்கள் தாம் அனுப்பும் கூப்பன்களின் தொகையைப் போல் இன்னொரு மடங்கு பிரவேசக் கட்டணமின்றி அனுப்பலாம். எமது காரியாலயத்திற்கு முதல் முதலாக சரியான விடை அனுப்புபவருக்கு ரூபா 150-00 பெறுமதியான ஒரு கைக் கடிகாரம் விசேஷ பரிசாக வழங்கப்படும்.

சரியான விடை யாழ்ப்பாணம் எக்ஸ்சேஞ் வங்கி (The Exchange Bank of India and Africa Ltd.,) யில் டிப்பாசிட் செய்யப்பட்டிருக்கிறது. சரியான விடைகள் ஒன்றுக்கு மேற்படின் குறித்த பரிசுத் தொகை சமமாகப் பகிர்ந்து வழங்கப்படும். இப்போட்டியில் ஒருவர் எத்தனை பரிசுகளும் பெற உரிமையுண்டு.

விடைகளைத்தனிக்காகிதத்தில் எழுதியும்அனுப்பலாம்

குறிப்புகள்.

1	யா	ம்
2		டு
3	கா	
4		ரி
5	பு	
6		டை
7	சி	
8		சு
9	த	
10		டி

1. "....அறிந்த மொழிகளில் தமிழ் மொழி போல் இனிதாவ தெங்குங் காணோம்"
2. சாதாரணமாய் வீட்டில் வளர்க்கப்படும் ஒரு மிருகம்.
3. இங்கே துஷ்ட மிருகங்கள் வசிக்கும்.
4. ....யைச் சிலர் கூட்டில் வைத்து அன்பாக வளர்ப்பார்கள்.
5. ....வேட்டையாடுவதற்கு விரும்பிச் செல்வர் சிலர்.
6. தீபாவளியின் போது இந்துக்கள் புதிய.....யை அணிந்து குதூகலத்துடன் இருப்பதைக் காணலாம்.
7. தீபாவளி என்றால்,....பிள்ளைகளுக்கு ஒரே சந்தோஷந்தான்.
8. பொன்.
9. "குலமகட்கழகு.....கொழுநனைப் பேணுதல்.
10. தீபாவளித் தினத்தன்று சில வீடுகளில் இதற்காகஅதிக பணத்தைச் செலவு செய்வார்கள்,

சரியான விடையும் பரிசு பெற்றவர் விபரமும் 14-11-47 சுதந்திரனில் வெளிவரும்.

இலவசக் கூப்பன்களுக்கும் நிபந்தனைகளுக்கும் எழுதுக.

Sri Lanka Manufacturing Co, Ltd.,
COURTS ROAD, POINT-PEDRO.

போட்டி டிப்ஸ்

விவேக அறிவுப்போட்டி நிர். 9 ன் விடை விமர்சனம் வெளிவந்துவிட்டது. தனிப்பிரதி 25 சதம். 50 சதம் போஸ்டல் ஓடர் அனுப்பி இரண்டு தடவைக்குரிய விமர்சனம் பெற்றுக்கொள்ளுங்கள்.

போட்டி லோலன் காரியாலயம், உடஹந்தன்னை S.P.O.

சிங்களப் பத்திரிகை எழுதியது

எந்நாட்டிலுமில்லாத இந்நாட்டு அதிசயம்

பாராளுமன்றமா? பதவி வேட்டையா?

பந்து மித்திரர்களிடையே நிர்வாகப் பொறுப்புகள் பங்கீடு!

வர்த்தக மந்திரியின் கபடநாடகம்

இந்த வார "காலய" பத்திரிகை எழுதியவற்றின் தமிழாக்கம்.

"இத்தேச மக்களின் பொது நன்மைக்கு உழைக்கக் கூடிய அரசாங்கத்தை அமைப்பதே எனது (யூ. என். பி.) கட்சியின் நோக்கமாகும்" என்று திரு சேனநாயக்கா முன் கூட்டியே பிரசாரம் செய்து விட்டார். தேர்தலும் முடிந்து, பிரதம மந்திரியாகியும், அங்குமிங்கும் நிபுணர்களை பொறுக்கி யெடுத்து, அரசாங்கத்தையும் நிறுவி விட்டார். ஆனால் பார்லிமெண்டு ஆரம்பிக்கு முன்பே நம் தலைவரின் கொள்கைகளை என்ன அழகில் யூ. என். பிக் காரர்களால் கையாளப்பட்டிருக்கிறது என்று இந் நாட்டுப் பொது நிகழ்ச்சிகளில் ஆர்வமுடையோருக்கு ஆச்சரியமாய் இருக்கிறது.

'லாப' விற்பனை பிரச்னை

சில மாதங்களுக்கு முன் துணிக் கட்டுப்பாட்டதிகாரி, புடவை வியாபாரிகளுக்கு விற்க வேண்டிய லாப விகிதத்தில் 100-க்கு 5ம் 10 மாகக் குறைத்திருந்தார். வியாபாரிகள் இந்த உத்தரவை எதிர்த்து, கவர்னர் காலடி வரைக்கும் சென்றார்கள். அவர் கையை விரித்துவிட்டார். வியாபாரிகளும் ஒரு கை பார்த்து விடுவதாக எண்ணி, லாபம் பெறக் கூடிய துணி வகைகளை மறைத்துவிட்டார்கள். இந்த சச்சரவினால் பொது மக்கள் கஷ்டப்படுவதுதான் மிச்சம்.

வர்த்தக மந்திரியின் கை வரிசை

சேனநாயக்க அரசாங்கத்தில் வர்த்தக மந்திரி பதவியைப் பெற்ற திரு சுந்தரலிங்கம் இந்த சிக்கலை ஒரு நிமிட நேரத்தில் நீக்கிவிட்டார். எப்படி? துணிக் கட்டுப்பாட்டதிகாரியின் உத்தரவை ரத்துச் செய்து, மொத்த வியாபாரிகளுக்கு 8 வீதமும் சில்லறை வியாபாரிகளுக்கு 12 வீதமும் லாபம் வைத்துக் கொள்ள அனுமதி கொடுத்ததுதான். ஏழைப் பொது மக்களின் நன்மையை முன்னிட்டு துணிக் கட்டுப்பாட்டதிகாரி விடுத்த உத்தரவை, வர்ததக மந்திரி திரு. சுந்தரலிங்கம் வியாபாரிகளின் சுய லாபத்திற்கு மாற்றிவிட்டார். இதிலிருந்து தேச மக்களின் நன்மைக்குப் பாடுபடும் சேனநாயக்க அரசாங்கதின் வேஷம் எப்படியென்று தெரிகிறது இந்த விவகாரம் யாருடைய நன்மைக்கு அனுகூலமாய் முடிந்தது? எல்லாம் திரு சேனநாயக்கா விரும்பியபடிதான்.

வேஷம் போட்ட திரு. சுந்தரலிங்கம்

திரு. சுந்தரலிங்கம் வவுனியாத் தொகுதியில் "சுயேச்சை" வேஷத்திலேயே தேர்தலில் நின்று வெற்றி பெற்றார் என்பது பகிரங்கம தேர்தலில் வெற்றிபெற்ற சுயேச்சை அங்கத்தினர்களெல்லோரும் ஸ்ரீ லங்கா சுயாதீனக் கட்சியைநிறுவுவதில் ஆர்ப்பாட்டமாய் இருந்த பொழுது, திரு. சுந்தரலிங்கம் பின் வாசலால் மாயமாய் மறைந்துவிட்டார். 48 மணிநேரமாக மற்ற உதிரிகள் தேடினார்கள் கடைசியில் சேனநாயக்கா அரசாங்கத்து மூலஸ்தானமான "ஆட்லண்ட்"டில இருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டது பின் என்ன வாயிற்று? சிறீலங்கா மனச்சாட்சிக்கு உதையும், மிதியும் கொடுத்து விட்டு வர்த்தக மந்திரியானார்.

பாரிஸ்டராய் இருந்தபொழுது

திரு. சுந்தரலிங்கம் பாரிஸ்டராக இருந்த காலத்திலும் கூட, துணிக் கட்டுப்பாடு அதிகாரிக்கும் துணி வர்த்தகர்களுக்கும் இடையே இருந்த எல்வாவிவகாரங்களிலும், அவர் வர்த்தகர்களின் சார்பாக வாதாடியதும் ஆசான் திரு. சேனநாயக்கா சொல்லுகிற "மக்கள் நன்மைக்குத்தான்" சிறீலங்கா சுயாதீனக் கட்சியை விட்டுச் சென்றதும், மந்திரி பதவியை எற்றுக்கொண்டதும் எல்லாம் அந்தபோலி "மக்களின் நன்மை"க்குத்தான்.

லாபக்காரர்கள் கட்சிதான் யூ. என். பி.

யூ. என். பி. யில் பெரும் வர்ததகர்கள், பஸ முதலாளிகள், ரொட்டிப் போரணைக்காரர்கள், ஹோட்டல் காரர்கள், மிலிட்டரி கொந்தருத்துக்காரர், பிளாக் மார்க்கெட் காரர்கள் ஆகியவர்களே பெரும்பான்மையினராக இருக்கின்றனர். ஆனபடியால், போக்கு வரத்து மந்திரி பிரயாணக் கட்டணத்தை அதிகரிப்பதற்கும், உணவு மந்திரி தேநீர்க் கோப்பையின் விலையை அதிகரிப்பதற்கும். வர்த்தக மந்திரி துணி வகைகளைப் போன்று உணவு வகைகளிலும் விலையை அதிகரிப்பதற்கும், மற்ற மந்திரிகளும் தத்தம் காரியங்களில் மனம்போல் நடந்துகொண்டால் அதெல்லாம் அந்தபோலி மக்களின் நன்மைக் குத்தான். இப்படி யெல்லாம பொதுமக்களுக்குச் சொல்லிவிட்டு, அரசாங்கதில் பெரும்பான்மையோராய் இருக்கும் அவர்களின் "குடும்ப நன்மைக்கு" மனம் போல் செய்து கொள்ளடும! தட்டிக் கேட்பது யார்?

இப்படித்தான் எதிர்காலத்தில்

வர்த்தக மந்திரியாரின் மக்களின் நன்மைக்காக அரசாங்க நிர்வாகம் செய்யும் இந்த நடவடிக்கை எல்லாம், கபினெட் மந்திரிசபை கூடுவதற்கு முன்பே என்பதை பொதுமக்கள் குறித்துக்கொள்ளவேண்டும். இப்படியானால் இனி மேலும் மந்திரிசபை பலதடவை கூடியபின் மக்களின் நன்மைக்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்பதை இந்தக் கட்டுரையிலிருந்து தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

அரசாங்கக் குடும்பங்கள்

மந்திரிப்பதவி வேட்டையில் வெறுப்பும் வைராக்கியமும் கொண்டவர்கள் யூ. என். பி. யில் இருக்கிறார்கள் என்பது உண்மை. இவர்களின் எதிர்கால நடவடிக்கைகள் என்னவாகும்? சேனட் சபைக்குள் நுழைந்து கொள்ளுவதிலும் இப்படித்தான் ஏற்பட்டிருக்கிறது. சேனநாயகா, பண்டாரநாயக்கா, கொத்தலாவல மொலமுரே, ரத்னாயக்கா, நுகவெல, ஜயவர்த்தனா ஆகியோர் தத்தம் உறவினர்களுக்கு பதவிகளைப் பெறுவதற்கு எவ்வளவோ பாடுபட்டார்கள் அதில் போராட்டமும் நிகழ்ந்தது. பதவிக்குத் தகுந்த திறமையோ அறிவோ இவர்களுக்கு செல்லாக்காசு

அரசாங்கத்தில் உறவினர்கள்

இத்தேச நிர்வாகம் ஒரு சிலருக்கே பொறுப்பாய் இருக்கிறது போதாதென்று, ஒரே குடும்பத்தில் உள்ளவர்களுக்கு தேசத்தின் உயர்ந்த முக்கிய பொறுப்புகளை கொடுப்பது, யுக்தானுசாரமா? அரசியல் நீதியா? அல்லது ஜனநாயகரீதியா? என்று பொது மக்கள் கண்டிப்பாய் கேட்கிறார்கள்? கீழே வாசித்துப்பாருங்கள்; உறவினர்கள் சேனட் சபையை கைப்பற்றுகிற மாதிரி. ஸ்ரீமதி மொலமுரே குமாரி ஹாமி, பார்ன்ஸ ரத்வத்த. ஜஸ்டின் கொத்தலாவல ஆகியோர் இப்படியாக மனைவியருக்கும், மாமனாருக்கும், சகோதரர்களுக்குமாக பங்கிட்டுக் கொண்டிருக்கிறார்கள். மற்றப்படி மந்திரி சபையில் திரு சேனநாயக்கா டட்லி சேனநாயக்கா, கொத்தலாவல, புலங்குலமே இருக்கிறார்கள் பார்லி மெண்டு தலைவர் திரு. மொலமுரேயின் பாரியார்தான் ஸ்ரீமதி மொலமுரே. திரு. பண்டார நாயக்காவின் மாமனார்தான் பார்ன்ஸ ரதவத்த திரு. சேனநாயக்காவின் மகனும், மருமகனும் தான் டட்லி சேனநாயக்காவும் கொத்தலாவலையும், புலங்குலமேயும் இவரின் மருமகன் தான். திரு. கொத்தலாவலையின் இளைய சகோதரன் தான் ஜஸ்டின் கொத்தலாவல.

இப்படியெல்லாம் இனமித்திரர்களுக்கிடையே அரசாங்க நிர்வாகப் பொறுப்புகளை யெல்லாம பகிர்ந்து கொள்ளும் மாமூல் வேறு தேசங்களிலும் கையாளப்படுகிறதா?

சைக்கிள் மோதி காயமடைந்தவர்

ஆஸபத்திரியில் மரணமானார்

கொழும்பு, அக். 17

பேலியகொடை பொலிஸ் பகுதியில் பேலியவத்தையைச் சேர்ந்த ஒருவர் நேற்று முன்தினம் இராதெலங்கபாதா வீதியில் ஒரு சைக்கிளினால் மோதுண்டு காயமடைந்தாரென்றும், அவர் ஆஸபத்திரியில் நேற்று காலை மரணமடைந்தாரென்றும் கூறப்படுகிறது. சைக்கிளை இடித்துச் சென்றவர் தான் மோதிவிழுத்திய நபரின் நிலைமையை கவனியாது சென்றுவிட்டதாக கூறப்படுகிறது போலிசார் புலன் விசாரணை செய்துவருகின்றனர்.

கமியூனிஸ்ட் அகிலம்

ஒழிக்க அமெரிக்க மந்திரி திட்டம்

சிக்காகோ, அக். 15

அமெரிக்க வர்த்தக மந்திரியும் முன்னர் மாஸகோவில் அமெரிக்க ஸதானிகராகஇருந்த வருமான ஹாரிமன் கமியூனிஸ்ட் அகிலம், உலகில் குழப்பகதை உண்டுபண்ணுமென்று தெரிவித்து அதை எதிர்த்துப் போராட அமெரிக்க சர்க்கார் எவ்வித நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்பது குறித்து 4 அமசங்களையுடைய ஒரு திட்டத்தை வெளியிட்டிருக்கிறார்.

சயாமிலுள்ள சீனர்கள்

பாங்காக், அக். 15

சயாம் பிரதம மந்திரி பின் வருமாறு தெரிவித்தார்:-சீனப் பொதுத தேர்தலுக்கு சயாமிலிருந்து வரும் சீனர்கள் வாக்கெடுப்பை இங்குள்ள சீன ஸ்தானிகர் மேறபார்வைசெயய வேண்டுமென்ற கோரிக்கையைசீனசர்க்கார் கைவிடுவிட்டனர். சயாமிலுள்ள சீனர்கள் துன்புறுததப்பட்டதாக 1945ல் ஏற்பட்ட சம்பவம் பறறி சியாங்கை ஷேக் இங்கு வந்திருந்தபோது இப்பொழுதிருந்த சயாம் பிரதமமந்திரி சரசமாகப் பேசி முடிவு செய்து விட்டார். மீண்டும் அபபிரச்னை கிளம்பியிருக்கிறது.

சயாமிலுள்ள சீனர்களை சீன ஸ்தானிகர் பதிவு செய்து வருகிறார். (ராய்ட்டர்)

பாராளுமன்ற அங்கத்தவருக்கு ரூ. 10 அபராதம்

கொழும்பு, அக் 16

மொரட்டுவைத் தொகுதி பாராளுமன்ற அங்கத்தினரான திரு. சோமவீர சந்திரசிரி லைசென்ஸ இல்லாது மோட்டார் கார் வைததிருந்ததாக குற்றம் சாட்டிக் கொண்டுவரப்பட்ட வழக்கில் முனிஸிப்பல கோர்ட் மஜிஸடிரேட எதிரிக்கு ரூ. 10 அபராதம் விதிததார்.

பாவித்த தபால் தலைகளை மீணடும் உபயோகித்தனர்

எதிரிகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டது

கொழும்பு, அக். 17

தபாற்கந்தோர் தினசரி அறிக்கை ஜாபிதாவில் கல்முனை, பலாங்கொடை, கடுகன்னுவை, புஜபிட்டியா, பன்னுலை ஆகிய இடங்களில் உபயோகிக்கப்பட்ட முத்திரைகளை மீண்டும் தபால்களில் ஒட்டி அனுப்பியவர்களுக்கு மாஜிஸ்டிரேட கோர்ட்டில் முறையே ரூ 5, 25, 20, 15, 6 அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேக திடர்பற்றிய ஆராய்ச்சி

பேராசிரியரின் திட்டம்

கொழும்பு, அக். 16

இலங்கையிலுள்ள இளைஞர்களின் தேக திடம்பற்றிய விபரங்களை சேகரிப்பதற்கு ஒரு திட்டத்தை இலங்கை சர்வகலாசாலை பேராசிரியர் ஒருவர் வகுத்துள்ளார். இலங்கை முழுவதிலும் உள்ள இளைஞர்களின் தேக திடம், அவர்கள் செய்யும் வேலைகள், அவர்கள் செய்யும் தேகாப்பியாசப் பயிற்சிகள் ஆகியன பற்றிய தகவல்களைச் சேகரிக்க வேண்டுமென்று அவர் கூறுகின்றார்.

ஈகிள் ஹவுஸ்

உயர்தர தாதுசத்துகளுள்ள பானங்களுக்கு இணையற்றது

தாதுசத்துக்கள் நிறைந்த கீழ்க்கண்ட எமது குளிர் பானங்களைக் கையிருப்பு வைத்திருக்கும்படி உங்கள் வியாபாரிகளைத் தூண்டுங்கள் :—

ஓரஞ்ச் பார்லி
லெமன் பார்லி
வைன்டோ
வைனோ
வினோ
பலதரப்பட்ட குளிர் பானங்கள்
பழ இரசங்கள்
டீ ஸைடர்
சம்பேன் ஸைடர்
ஸ்பெஷல் ஸைடர்

தந்தி:- "ஈகிள் ஹவுஸ்" நிர். 41, பார்பர் வீதி.
போன்:- 2193 கொழும்பு

ஏஜண்டுகள் இல்லாத பகுதிகளுக்கு ஏஜண்டுகள் தேவை

கதம்பைக் கயிறு

கிந்தொட்டை கதம்பைக் கயிறுகளும் தும்பால் செய்யப்பட்ட சாமான்களும் நேரிலோ தபால் மூலமோ பெற்றுக்கொள்ளலாம்

ஆர்டர்களுக்கு தேவையான சாமான்கள் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

தேடா கயிறு, கம்பை, வடம், ஈக்கில்தடி, தும்புத்தடி, கயிற்றுப்பாய், காப்பற், கால்மிதி இவ்விடம் குறைந்த விலையில் வேண்டிய தினுசுகளில் பெற்றுக்கொள்ளலாம்.

இத்தோடு நிறம் லங்கா பிராண்ட் வினுகரியும், கை பேக்ஸ்களும் கிடைக்கும்

மொத்த வியாபாரிகளுக்கும் சில்லறை வியாபாரிகளுக்கும் விசேஷ சலுகை உண்டு

விலை விபரங்களுக்கு எழுதுங்கள்.

A. Abdul Kaiyoom,
Coir Ropes
Manufacturer at Gintota
No 44, Wolfendahl Street
Colombo.

ஏ. அப்துல் கையூம்,
44, ஆதிருப்பள்ளித்தெரு,
கொழும்பு.
கயிற்றுத் தொழிற்சாலை,
கிந்தொட்டை.

லொசிஞ்சர், டொபி, ஐசிங் சுகர்

இம்மூன்றிலும் முதல்தரமானது வேண்டுமென்றால்

குயின் (ராணி) மார்க்கே

பார்த்து வாங்குங்கள்



குயின் (ராணி) கண்பெக்ஷன் கம்பெனி
297 & 307 சீ ஸ்டிரீட் (செட்டியார் தெரு)
கொழும்பு
Phone: 4511 Telegrams:- "CONFECTION"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு தேர்தல் மனுக்கள் நிராகரிக்கப்படலாம்

ஜாமீன் பணம் கட்டப்படவில்லை

கொழும்பு, அக். 17

சமீபத்தில் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் கம்பஹா தொகுதிக்கு வெற்றி பெற்ற திரு. டேவிட் கருணரத்தினமத்துரட்ட தொகுதிக்கு வெற்றி பெற்ற திரு எம். டிங்கிரி பண்டா ஆகிய இருவரது தேர்தலையும் ஆட்சேபித்து இருவர் சுப்ரீம் கோர்ட்டில் மனுக்கள் தாக்கல் செய்திருந்தனர். இம் மனுக்களுடன் கட்டப்பட வேண்டிய ஜாமீன் தொகைகளை மனுதார்கள் மூன்று நாட்களுக்குள் கட்டத் தவறி விட்டதாக அறிவிக்கப்படுகிறது. இவர்களுடைய மனுக்களும் நிராகரிக்கப்படக் கூடுமென்றும் அறியப்படுகிறது.

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய சலுகை வரி

ஆங்கிலோ-அமெரிக்க வரி ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டது

நியூயார்க், அக். 17

நியூயார்க் டைம்ஸ் ஜினிவா நிருபர் எழுதுவதாவது:- பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளிலுள்ள பிரிட்டிஷ் ஏகாதிபத்திய சலுகை வரிகளை 25 சதவிகிதம் குறைப்பதற்கு பிரிட்டிஷ் சர்க்கார் இணங்கி விட்டனர். ஆகவே ஆங்கிலோ-அமெரிக்கா வரி ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டது. (ராய்ட்டர்)

விவசாய இலாகா புதிய டைரக்டர்

கொழும்பு வந்து சேர்ந்தார்

கொழும்பு, அக். 18

இலங்கை விவசாய இலாகாவின் புதிய டைரக்டர் திரு. டி. ரிண்ட் நேற்றுமுன்தினம் "பண்டிட்" என்னும் கப்பலில் ரங்கூனில் இருந்து இலங்கை வந்து சேர்ந்தார். இவர் ப்ர்மாவில் 24 வருட காலம் விவசாயப் பகுதியில் கடமையாற்றியுள்ளார். இவர் மூன்று வருட ஒப்பந்தத்தின் மீது இங்கு கடமை ஏற்க வந்துள்ளார்,

கிருஷ்ணபாயின் ஜெயந்தி விழா

சாவகச்சேரி, அக். 13

13-10-47 திங்கட்கிழமை மாலை முகமாலை ஆனந்தாஸ்ரமத்தில் வாலிபர் சங்க ஆதரவில் 'அன்னை கிருஷ்ணபாயின் ஜெயந்தி விழா திரு. கே. எஸ். முகதுவேலு காரியாதிகாரி அவர்களின் தலைமையில் ஆரம்பமாகியது. தலைவர் முன்னுரையின் பின் "மனிதனின் இயற்கையும் அதை வென்று ஈடேறும் வகையும்" என்னும் விஷயம் பற்றி திரு. என். அருணாசலம் அவர்கள் சபையார் மெச்சும் வகையாக வெகு அழகாகப் பேசினர். இவரைப் பின் தொடர்ந்து பெண்கள் காட்டிய பெருவழி என்ற விஷயத்தில் திரு. கே. எஸ். ஆனந்தர் பேசினர்.

அன்புடன் கிருஷ்ணபாயின் திவ்விய சரித்திரம் திரு. பி. எம். ஞானப்பிரகாசம் ஆசிரியரால் சபையாருக்கு விளக்கப்பட்டது. (ந-நி)

பால் உணவுப் பொருள் தட்டுப்பாடு

கொழும்பு, அக் 18

குழந்தைகளுக்கு உபயோகிக்கப்படும் பால் உணவுப்பொருள் ஆஸ்திரேலியா, சுவிட்ஜர்லந்து முதலிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. இப்பொழுது இவை மார்க்கட்டுகளில் விற்பனைக்குக் கிடைக்கவில்லையென்று கூறப்படுகிறது.

பால் உணவுப் பொருள்கள் விரைவில் வருமென எதிர்பார்க்கப்படுவதாக திரு. கே. ஆள்வாப்பிள்ளை கூறுகிறார்.

அடிஸன் பிரபு பிரிட்டன் புறப்பட்டார்

கொழும்பு, அக். 18

இலங்கை வந்திருந்த அடிஸன் பிரபுவும் அடிஸன் சீமாட்டியும் நேற்று காலை விமான மூலம் பிரிட்டன் புறப்பட்டு விட்டனர்.

திரு. பிலிப் குணவர்தன அப்பீல் தள்ளுபடி

பிரிவி கவுன்ஸிலுக்கு மனுச் செய்யக்கூடும்

கொழும்பு, அக். 18

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் கோட்டே தொகுதிக்கு போட்டியிட்டு வெற்றிபெற்ற திரு பிலிப் குணவர்தனு, கொழும்பு தெற்கு மாஜிஸ்டிரேட் அவருக்கு விதித்திருந்த மூன்று மாத சிறைத் தண்டனையை ஆட்சேபித்து அப்பீல் செய்திருந்தார். இந்த அப்பீல் நேற்று காலை தள்ளுபடி செய்யப்பட்டது. இப்பொழுது திரு பிலிப் குணவர்தனு பிரிவி கவுன்ஸிலுக்கு அப்பீல் செய்யக்கூடுமென்று வதந்தி உலவுகின்றது.

சேனட் சபை முதற் கூட்டம்

நவம்பர் 11-ம் தேதி நடைபெறக் கூடும்

கொழும்பு, அக். 17

சேனட் சபையின் முதற் கூட்டம் நவம்பர் 11-ம் தேதி நடைபெறக்கூடுமென்று தெரிகிறது. இக் கூட்டத்தில் சேனட் சபையின் தலைவர், உபதலைவர் ஆகியோர் தெரியப்படுவார்கள். பிரதம மந்திரியுடன் ஆலோசனை செய்து கவர்னர் சேனட் சபைக்கு 15 பிரதிநிதிகளை நியமனம் செய்வார். இவர்களின் பெயர்களை கவர்னர் சமீபத்தில் அறிவிப்பார்.

கோணிப்பை ஏற்றுமதிக்கு லைசென்ஸ் வழங்க மறுப்பு

ஏற்றுமதி கட்டுப்பாட்டு அதிகாரிமீது வழக்குதாக்கல்

கொழும்பு, அக். 18

கோட்டை பிரின்ஸ் வீதியில உள்ள மெஸர்ஸ் ஒஸ்டின் டிமெல் லிமிடெட் ஏற்றுமதி கட்டுப்பாட்டதிகாரி திரு. ஏ. கிரிஸ டோபல்ஸ மீது கோணிப்பை ஏற்றுமதிக்கு லைசென்ஸ வழங்க மறுத்தது சம்பந்தமாக ஒரு வழக்கை கோர்ட்டில் தாக்கல செய்தார். நீதிபதி திரு ஜெயதிலக்கா நேற்று முன்தினம கட்டுப்பாட்டதிகாரிக்கு வழக்கு பற்றி அறிவித்தல் அனுப்புமபடி தெரிவித்தார். ஏற்றுமதி கட்டுப்பாட்டதிகாரிதமக்கு லைசென்ஸ வழங்க மறுத்த விட்டதாக மனுதார் தெரிவித்துள்ளார்.

இலங்கை உள்நாட்டு விமானப்போக்குவரத்து

தென்னிந்திய நகரங்களையும் இணைக்க ஆலோசனை

கொழும்பு, அக். 18

இலங்கையில் உள்நாட்டு விமான ஸர்வீஸிற்கு வகுத்துள்ள சர்க்காரின் புதிய திட்டத்தில் இப்பொழுது தென் இந்திய நகரங்கள் சிலவற்றையும் இணைக்க ஆலோசிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. யாழ்ப்பாண தீபகற்பத்திற்கும் தென்னிந்தியாவுக்கு மிடையேயுள்ள தொடர்புகள் அதிகமானதால் ஸதல விமான ஸர்வீஸின் அந்தமாக இருக்குமாகாயகேசன் துறையுடன் தென்னிந்திய நகரங்கள் இணைக்கப்படக்கூடும். இப்பொழுது கையாளப்படும் பரீட்சார்த்த முறைகள் திருப்தியான முறையில் இருப்பின் தகுந்த நடவடிக்கைகளை உடனே கையாளப்படுமென்றும் கூறப்படுகிறது.

புதிய திட்டம் வெற்றிகரமானதாக இருப்பின் நிரந்தரமாக தென்னிந்தியா - இலங்கை விமானப் போக்குவரத்துகள் நடத்தப்படுமென்றும் இம் மாதம் முடியுமுன் உள்நாட்டு விமான ஸர்வீஸகள் ஆரம்பமாகுமென்றும் கூறப்படுகிறது.

கண்டி சர்க்கார் குமாஸதாக்கள் சங்கம்

புதிய தலைவர் தெரியப்பட்டார்

கண்டி, அக். 17

கண்டி சர்க்கார் குமாஸ்தாக்கள் சங்கத்திற்கு திரு. எஸ். டி. சில்வா தலைவராகவும் திரு. கே சுப்பிரமணியம் கௌரவ காரிய தரிசியாகவும் தெரிவு செய்யப்பட்டனர். இக் கூட்டத்தில் தொழிற் சங்க உரிமை பற்றி விவாதிக்கப்பட்டது.

விவசாயத்துக்கு மின்சார உதவி

தா. பி. வி. சங்கக் கூட்டத்தில் பேச்சு

கொழும்பு, அக். 18

தாழ்ந்த பிரதேச விளைபொருள் சங்கத்தின் கூட்டமொன்று சங்கத் தலைமைக் காரியாலயத்தில் திரு. ஸி. ஏ. எம். டி. சிவா தலைமையில் நடைபெற்றது இக்கூட்டத்தில் தெஹிவளை மின்சார எஞ்ஜினீயர் திரு. ஜே. ஈ. டி மெல், மின்சார உதவியுடன் பயிர்களின் உற்பத்தியையும் அவற்றிலிருந்து அதிக பயிர்களைப் பெறுவதையும் எவ்விதம் அதிகரிக்க முடியுமென்னும் விஷயம் பற்றி பேசினார். விவசாயத்துக்கு மின்சாரத்தின் உதவியிருபபின அதிக பயனைப் பெற முடியுமென்றும் மின்சாரத்தை எவ்விதம் உபயோகிப்பதென்றும் அவர் கூறினர்.

மூன்று பெயர்களுள்ள பெண்மீது குற்றச்சாட்டு

எதிரி ரூ 500 பிணையில் விடப்பட்டார்

கொழும்பு. அக் 18

வெள்ளவத்தை அலெக்ஸாந்திரா ரஸதாவில் வசிக்கும் ராசுனே அமீர் பாருக் என்னும் ஸ்ரீமதி திலகராகாதி என்னும் ஸ்ரீமதி தியாகராஜா என்னும் ஸ்ரீமதி பாலசுந்தரசுவாமினபவர் நம்பிக்கை மோசம் செய்ததாக குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு கொழும்பு தெற்கு கோர்ட்டில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விசாரணையின் போது இவர் சிங்கள ஜாதியைச் சேர்ந்தவரென்றும் பின் இஸ்லாமிய மதத்துக்கு மாற்றப்பட்டவரென்றும் இவர் வசிக்கும் அதே வீதியைச் சேர்ந்த மிஸ் எஸ். செல்லத்துரை என்பவரிடமிருந்து ஒரு நகை ஸெட்டும், ஒரு சேலையும் வாங்கியதாகவும் அவற்றைத் திருப்பிக் கொடுக்கவில்லை யென்றும் கூறப்பட்டது. எதிரி தாம் குற்றவாளியல்லவென்று கூறியதன் மேல் நீதிபதி எதிரியை ரூ 500 பிணையில் போகுமாறு விடுத்து மேற்கொண்டு விசாரணையை அக். 20-ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

கொழும்பு நகரின் அவசர சீர்திருத்தங்கள்

சர்வ கலாசாலையில் பேராசிரியர் பேச்சு

கொழும்பு. அக் 18

கொழும்பு 'கிங் ஜோர்ஜ்' மண்டபத்தில் நேற்று முன்தினம் இலங்கை சர்வகலாசாலை உதவி அத்தியட்சகர் டாக்டர் ஐவர் ஜென்னிங்ஸ் தலைமையில் நடைபெற்ற கூட்டமொன்றில் 'தற்கால பூமி சாஸ்திரமும் சமூகத்தில் அதன் உபயோகமும்' என்னும் விஷயம் பற்றி பேராசிரியர் ஜே என் ஜி. லெபொன் பேசுகையில் கொழும்பு நகரிலே செய்யப்பட வேண்டிய அததியாவசியமான சீர்திருத்தங்கள் உடனே செய்யப்படவேண்டுமென்று கூறினர். தொடர்ந்து பேசுகையில் நகரின் நிலைமை பற்றியும் எவ்விதம் சீர்திருத்தங்கள் செய்யப்படவேண்டுமென்றும் விபரமாகக் குறிப்பிட்டார்.

காந்தி ஜெயந்தி விழா

தெல்லிப்பளை, அக். 15

மாவை விஸவகர்க சங்க ஆதரவில் ஐக்கிய தொழிற்சங்க மண்டபத்தில் திரு. க. வேதாரண்யம் தலைமையில் மகாதமா காந்தி அடிகளின் 79-வது பிறந்த தினக்கொண்டாட்டம நடைபெற்றது. காந்திஜியின் படம் தலைவரால் கூட்ட ஆரம்பத்தில் திறந்து வைக்கப்பட்டது. திரு. வே. கனகரத்தினம் தேசியக் கீதங்களைப் பாடி சபையினரை மகிழ்வித்தார். இக்கூட்டத்தில் திருவாளர்கள்: த வேலுப்பிள்ளை, நா. கந்தையா, வ. நடேசு ஆகியவர்கள் காந்தியின் பெருமைகள் பற்றியும் அவர் ஆற்றிய தொண்டுகள் பற்றியும் பேசினர்கள். தலைவர் பேசுகையில் அஹிம்ஸா மூர்த்தியின் சிறப்புகளை சிறப்பாக எடுத்துக் கூறினர். சிற்றுண்டி விருந்துடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

நதியின் நீருக்காகப் போராட்டம்

பாரசீகம்- ஆப்கானிஸ்தான் தகராறு

ஆப்கானிய அணை தகர்க்கப்பட்டது

டெஹ்ரான், அக். 15

பாரசீக மலை ஜாதியினர் ஆப்கானிய பூமியுள் புகுந்து அங்குள்ள மங்கொஸ்கி அணையைத் தகர்த்துவிட்டார்கள். ஹிர்மாந்த் ஆற்று நீரை பாரசீகத்திலிருந்து மேற்படி அணை வேறு திக்குக்குத் திருப்பி விடுகிறது என்று அவர்கள் எண்ணுவதே இதற்குக் காரணம்.

மேற்படி ஆறு ஆப்கானிஸ்தானில் உற்பததியாகி பாரசீக சிஸ்டான் மாகாணத்திற்குப் பாய்ந்து, அங்கிருந்து பின்னரும் ஆப்கானிஸ்தானுள் நுழைந்து செல்கிறது.

பாரசீகத்தில் உள்ள ஹிர்மாந்த் ஆறு வரண்டு போய் விட்டது. இதனால் 6000 சிஸ்டானியர்கள் ஆப்கானிஸ்தானில் குடியேறிகொண்டிருக்கிறார்கள்.

பாரசீக விவசாய மந்திரி ஹிர்மாந்த் ஆற்றுநீர் வேறு திக்குக்குத் திருப்பப்படுவதால் சிஸ்டான் ஜல சப்ளை சீர்குலைந்து, அம் மாகாணம் முழுவதும் பாலைவனமாகி வருவதாகவும், எனவே இதுபற்றிய ஐக்கிய நாடுகள் சபைக்குத் தாம புகார் செய்யப் போவதாகவும் குறிப்பிட்டார்.

பாரசீகத் தொடர்பு சம்பந்தமான ஆப்கானிய மந்திரியோ "மழைஇன்மையால் ஆறு வரள்வதற்குகாரணம்ஆப்கானிய அரசாங்கம் அல்ல; வான மண்டலமே காரணம்' எனக் கூறியுள்ளார்.

போலிஸாரைத் தாக்கினர்

எண மருக்குச் சிறைத் தண்டனை

குருநாகலை, அக். 19

கலகெதரா வில் இருந்து ஜாஎலைக்கு கள்ளமாக ஒரு லொறியில் 10 எருமைகளை ஏற்றிச் செல்வதாக தகவல் அறிந்த போலிஸார் வழியில் மறைந்திருந்தனரென்றும் அவர்கள் லொறியைத் தடைசெய்த போது லொறியில் இருந்தவர்கள் போலிஸாரைத் தாக்கியதாகவும் கூறப்பட்ட வழக்கு அடிஷனல் ஜில்லா நீதிபதிமுன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது விசாரணை முடிவில் இதில் சம்பந்தப்பட்ட எட்டு எதிரிகளான எம். கிரிபண்டா, எல். புஞ்சா, கே. டி. ஹொராதலா, எச். கே. பாண்டாயா, எல். சைமன் பெரேரா, எல். விக்டர் பெரேரா, கே. சிரில் பெரேரா, எஸ் ஏ பெர்ணாண்டோ ஆகியவர்களில் 1-ம், 3-ம, 4-ம், 5-ம், 7-ம், 8-ம் எதிரிகளுக்கு தலா 7 மாதச் சிறைத தண்டனையும் 2-ம் எதிரிக்கு இரு வருடச் சிறைத தண்டனையுடன் நான்கு வருட போலிஸ மேற்பார்வையும் 6-ம் எதிரிக்கு ஒரு வருடச் சிறைத தண்டனையுடன் இரண்டுவருட போலிஸ மேற்பார்வையுமென்று நீதிபதி தீர்ப்பளித்தார்.

அரிசி கடத்தியவருக்கு ரூ. 70 அபராதம்

ஊர்காவற்றுறை, அக். 17

ஊர்காவற்றுறைப் பகுதியிலுள்ள புளியங்கூடலைச் சேர்ந்த முருகர் செல்லப்பா என்பவர் 14-ம் தேதி இரவு சுமார் 10-30 மணிக்கு சுருவில் கடற்கரையோரத்திலிருந்து அரிசி கடத்தியதாக குற்றஞ்சாட்டிக் கொண்டுவரப்பட்ட வழக்கில் எதிரி குற்றத்தைஒப்புக்கொண்டார். ஊர்காவற்றுறை மாஜிஸ்டிரேட் எதிரிக்கு ரூ. 70 அபராதம் விதித்து அரிசியை உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியிடம ஒப்படைக்கும்படி தீர்ப்பளித்தார்.

குருநாகலையில் பிரதமருக்கு பொது வரவேற்பு

குருநாகலை, அக். 17

குருநாகலைக்கு பிரதம மந்திரி திரு. டி. எஸ். சேனநாயகா முதன் முதல் அதிகாரப் பூர்வமாக விஜயம்செய்யும்பொழுது அவருக்கு பொது வரவேற்பளிப்பதென்று குருநாகலை அர்பன் சபை முடிவுசெய்துள்ளது.

ஜெர்மன் யுத்த நஷ்ட ஈடு

தளவாடங்களை அப்புறப் படுத்தாதே

ஜெர்மன் அரசியல் வாதிகள் எச்சரிக்கை

ஹாம்பர்க், அக். 16

ஜெர்மன் யுத்த நஷ்ட ஈடு சம்பந்தமாக ஜெர்மனியிலிருந்து நேச நாடுகளுக்கு தளவாடங்களை அப்புறப்படுத்துவது பற்றி பிரிட்டனும் அமெரிக்காவும் சேர்ந்து செய்துள்ள திட்டத்தை ஜெர்மனியிலுள்ள இடதுசாரியையும் வலதுசாரியையும் சேர்ந்த அரசியல் கட்சிகள் கண்டித்தன. தளவாடங்களை அப்புறப்படுத்துவதால், ஜெர்மனி அதோகதியாகுமென்றும அபாயம் நேரிடுமென்றும் அவைகள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

ஹாம்பர்க்கிலிருந்து நேசதேசங்கள் யுத்த நஷ்ட ஈடாக தளவாடங்களை அப்புறப்படுத்தினால் நகரம் பாழாய்ப்போகுமென்று ஹாம்பர்க்கிலுள்ள கைதொழில் முதலாளிகள், பொருளாதார நிபுணர்கள், தொழிற் சங்கத் தலைவர்கள் எல்லோரும அஞ்சுகிறார்கள். பெர்லினிலிருந்து பிரிட்டனும் அமெரிக்காவும் அப்புறப்படுத்தும் தளவாடங்களின் ஜாபிதாவும் மோசமானதாக இருக்குமென்று கருதுகிறார்கள்.

யுத்தக் கப்பல்கள்

வாஷிங்டன், அக். 16

ஜெர்மன் யுத்தக் கப்பல்களை யுத்த நஷ்ட ஈட்டுக்குப் பங்கீடு செய்வது சம்பந்தமாக முக்கட்சிக் கமிஷன் அமெரிக்காவுக்கு 31 ஜெர்மன் யுத்தக் கப்பல்கள் கொடுக்கப்படவேண்டுமென்று முடிவு செய்திருந்தனர். அந்த 31 யுத்தக் கப்பல்களையும் அமெரிக்கா பிரான்சுக்கு கொடுத்து விடத் தீர்மானித்திருக்கிறது. ஜெர்மனியின் மிதக்கும் துறைமுகமொன்றும் கொடுக்கப்படும். [ராய்ட்டர்]

பிரான்ஸில் போக்கு வரத்து ஸ்தம்பிதம்

நாடு முழுவதும் வேலை நிறுத்த மும்முரம்

பாரிஸ், அக். 16

பாரிஸ் வேலை நிறுத்தங்களால் ஸதம்பித்துப்போயிருப்பதால் குழப்பங்கள் ஏற்படாதவாறு தடுக்க பிரெஞ்சு சர்க்கார் பாரிஸ் நகரில் ஏராளமான துருப்புகளைக் கொண்டுவந்து பந்தோபஸது செய்திருக்கிறார்கள். வேலை நிறுத்தத்தால் எல்லா துறைமுகங்களிலும் கப்பல் போக்குவரத்தும் பிரான்ஸ முழுவதிலுமுள்ள போக்குவரத்துகளும் காஸ கைத்தொழிலும் மின்சார கைத்தொழிலும ஸதம்பித்துப்போயிருக்கின்றன.

பிரிட்டிஷ் யுத்தக் காரியாலயத்தில் வேலை நிறுத்தம்

லண்டன், அக். 16

இன்று பிரிடடிஷ் யுத்தக் காரியாலயத்தில் போடடோ பிரின்டிங் மெஷின் ஆப்பரேட்டர்கள் ஆண்களும் பெண்களுமாக 100 பேர்கள் வேலை நிறுத்தம செய்திருக்கிறார்கள், சம்பள உயர்வு கோரி வேலை நிறுத்தம் செய்கின்றனர். [ராய்ட்டர்]

சர்வதேச தொழிலாளர் மகாநாடு

இரு இலங்கைப் பிரதிநிதிகள் தெரியப்பட்டனர்

கொழும்பு, அக். 18

புதுடில்லியில் நடக்க இருக்கும் சர்வதேச தொழிலாளர்கள் ஸதாபனங்களின் மகாநாட்டுக்கு திரு. ஸி. எச். இஸட். பெர்ணான்டோவும், திரு. ஆர். ஈ. ஜெயதிலகாவும் பிரதிநிதிகளாக செல்வர். இவர்களை இலங்கை சர்க்கார் இம்மகாநாட்டுக்கு அனுப்புவதென்று முடிவுசெய்துள்ளது.

அலாஸ்காவில் பூகம்பமா?

பர்மிங்ஹாம், அக். 16

கல்கத்தாவிலும், இங்கும் பதிவுசெய்யப்பட்ட பூகம்பம் அல்லஸ்காவில் அல்லது அலாஸகாவுக்குச் சமீபம் நடைபெற்றிருக்கவேண்டும் என்று ஜே. ஜே. ஷோ இங்கு தெரிவித்தார்.

கிரவுன் தியேட்டர் ஸ்கின்னர்ஸ் ரோட் மருதானை

தினசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும்
சனியும் ஞாயிறும் மெட்னி 3 மணிக்கும்.

சித்திரகலாவின் உன்னத தயாரிப்பு!

"தாய் நாடு" தமிழ்ப் படம்

வெற்றிகரமான 5-வது வாரம்!

அடக்குமுறைகளுக்கு ஆட்பட்டிருந்த மக்களின் மீட்சிக்காகவும் தாய்நாட்டின் விடுதலைக்காகவும் நடக்கும் போராட்டங்களைக் கொண்டது.

மெட்ரஸ் மெயில் புகழ் பாட்லிங்மணி — புதிய நடிகை சுந்தரி

மற்றும் பலரும் சிறப்புடன் நடித்தது.

பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் மெட்னியில் பால்கனிக்கு அரைச் சார்ஜ் எடுக்கப்படும்.

மொத்த வியாபாரிகளுக்கோர் சந்தர்ப்பம்.

ஷாப்புச் சாமான்களில் உங்களுடைய தேவைகளுக்கு இலங்கையில் இறக்குமதியாளர்களில் முன்னணி வகிக்கும் எங்களை வினவிக்கொள்ளுங்கள். கீழ்க்கண்ட பண்டங்களில் நாங்கள் முக்கியத்துவம் பெற்றவர்கள்:-

லசிஞ்சர்ஸ், சாக்லேட்ஸ், இங்கிலீஷ் பிஸ்கட் தினுசுகள், டின்பால் உணவுகள், டின் ஆகார வகைகள், இங்கிலீஷ் மருந்துகள், டொய்லட் தயாரிப்புகள், நூல் வகைகள், சிகரெட்டுகள், இன்னும் பலவித சாமான்கள்,

கவனிப்பு:-

அயலூர் வியாபாரிகள் மாதிரிப் பட்டியல் (Pro-forma Invoices) களுக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம்.

O. N. ASSEN MOHAMED & Co.,
Dam Street, COLOMBO.
Grams: "JUST" Phone: 4057

ஸ்தலஸ்தாபன சர்க்கார் சட்டங்கள்

வேலைசெய்ய முடியாதவை என நகரகமிஷனர்கூறுகிறார்

கொழும்பு, அக். 18

ஸ்தல ஸதான சர்க்கார் சர்வீஸ சட்டங்களின்படி வேலை செய்வது கஷ்டமென்றும் இச்சட்டங்கள் முறைப்படி வேலை செய்ய உதவாதவைகளென்றும் கொழும்பு முனிஸிபல் சபை கமிஷனர் திரு எஸ். பி. விக்கிரமசிங்கா கொழும்பு மேயருக்கு அனுப்பியுள்ள ஒரு மகஜரில் குறிப்பிட்டுள்ளார். அந்த பிரஸதாப சட்டங்கள் 69ல் 65ந்தும் பொது சேவைச் சட்டங்களை அப்படியே காப்பியடித்துள்ளதாகவும் மீதமான நான்கு சட்டங்களும் சில அதிகாரிகளின் ஒழுக்க முறை பற்றி யிருப்பதாகவும் அவை வேலை செய்யமுடியாத சட்டங்கள் என்றும் சிலர் கடமைகளை ஆற்றும் இடத்தில் தடுமாற்றங்களும் ஏற்படுமென்றும் முனிஸிபல் சபை இச்சட்டங்களைப் பரிசீலனை செய்யுமுன் அதனை கெஜட்டில் பிரசுரித்து சட்டமாக்கி விட்டனர் என்றும் கமிஷனர் மேலும் தெரிவித்துள்ளார்.

இடதுசாரித் தலைவருக்கு முஸ்லிம்சங்க வரவேற்பு

டாக்டர் பெரேரா பேச்சு

களுத்துறை, அக். 15

களுத்துறைப்பார்லிமெண்ட் அங்கத்தினர் திரு. சமஸி குணவர்த்தனு அவர்களுக்கு கடியவத்தையில் ஐக்கிய முஸ்லிம் சங்க சார்பில ஒரு வரவேற்பு பசாரம் நடத்தபபட்டது. அப்பொழுது பேசிய டாக்டர் என்.எம். பெரேரா '19-ம் நூற்றாண்டுப் பல்லவியைப் பாடும் சர். மொஹமட் மாக்கான் மரிக்கார் போன்றவர்களை முஸ்லீம்கள் பின் பற்றக்கூடாது' எனக் குறிப்பிட்டார்.

சுந்தரலிங்கம், சித்தம்பலம், இப்ராஹிம், நல்லையா போன்றவர்களின் நடத்தையையும் அவரால் கண்டிக்கப்பட்டது.

டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவும் இக்கூட்டத்தில் பேசினார்.

மனித உற்பத்திபற்றி ஆப்பிரிக்காவில் ஆராய்ச்சி

இலங்கை காட்சிசாலை டைரக்டரும் கலந்துகொள்வார்

கொழும்பு, அக். 17.

மனித உற்பத்தி சம்பந்தமான ஆராய்ச்சிகளை நடத்துவதற்கு கலிபோனியா சர்வகலாசாலை நடவடிக்கைகளை எடுத்திருந்தது. இந்த ஆராய்ச்சிகள் ஆப்பிரிக்காவில் நடத்த முடிவு செய்யப்பட்டிருந்தது. இந்த ஆராய்ச்சிக் கோஷ்டி இரு பிரிவுகளாக வேலை செய்யும். ஒன்று தென்னாப்பிரிக்காவிலிருந்தும் மற்றது பாயிம் ஓயாஸிஸில் இருந்தும் (கெய்ரோவிலிருந்து தென்மேற்கே 50 மைல் தூரத்திலிருந்து) வேலைகளை ஆரம்பிக்கும். இரண்டாவது கோஷ்டியுடன் இலங்கை காட்சிசாலைகள் டைரக்டர் திரு தெரணியகலையும் சேர்ந்து வேலை செய்வார். இவர் கெய்ரோவுக்கு இன்று விமான மூலம் புறப்பட்டுள்ளார்.

திரு. எம். டி. ராகவன் மூன்று மாத காலத்துக்குடைரக்டராக கடமையாற்றுவார்.

அரசாங்கத்தைக் கவிழ்க்கும் சதியா?

செக்கோஸ்லாவிய அரசாங்கத்தின் நடவடிக்கை

பிரேக், அக். 16

டாக்டர் பகர், டாக்டர் கெம்னி என்பவர்கள் மீது அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதிசெய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. தேசிய சபை அங்கத்தினர் ஆதலால் இவர்களைக் கைதுசெய்வதில் தடையிருந்தது. அத்தடையை நீக்குவதென்று செக்கோஸ்லாவிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது

பிரஸ்தாப தடை ரத்தாகி ஒரு மணித்தியால கேரத்தில் அவர்கள் இருவரையும் கைது செய்ய வாரண்டுகள் பிறப்பிக்கப்பட்டன. [ராய்ட்டர்]

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டிற்காக, 1947-ம்ஆண்டு அக்டோபர் மீ 18உ இந்த பத்திரிகை 194A. நட்டாரத் தெரு, கொழும்பு, சுதந்திரன் அச்சுக் கந்தோரில் அச்சிட்டு கொழும்பு, மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்பெறுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org